பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி
Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 08 வியாழக்கிழமை (25.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 280

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

### யாழ்.குடாநாடெங்கும் எழுச்சிக்கோலம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தியாகி திலீபனின் 16-ம் ஆண்டு நினைவு தின இறுதிநாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் அஞ்சலிக் கூட்டங்களும் நாளை கோட்ட ரீதியாக எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

யாழ-நல்லூர், வலிகாமம் கோட்டங்களுக்கான நிகழ்வுகள் நல்லூர் முருகன் ஆலய முன்றலிலும் தென்மராட்சிக் கோட்ட நிகழ்வுகள் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலிலும், வடமராட்சிக் கோட்ட நிகழ்வுகள் அல்வாய் ஸ்ரீமுத்துமாரி அம்மன்ஆலய முன்றலிலும் தீவகக் கோட்ட நிகழ்வுகள் புளியங் கூடல் முத்துமாரி அம்மன் ஆலய முன்றலிலும் நடைபெறவுள்ளது.

அனைத்துக் கோட்டங்களிலும், அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி (10ம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ்ப் பிரகடனம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிவிட்டது. காலம் கடந்து போயுள்ளது. நமது இயல்பு வாழ்க்கை இழுத்தடிக்கப்பட்டு, பேச்சுவார்த்தை இடை நின்று போயிற்று. யுத்த மேகம் எம் மீது திணிக்கப்படுகின்றதான நிலைமை உருவெடுத்துள்ளது. இந்நிலைமையை தமிழ் பேசும் மக்களாகிய நாம் மாற்றவிரும்புகிறோம்.

அந்த நோக்குடனேயே வவுனியாவின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம், பொங்குதமிழர்களாய் கிளர்ந்தெழுந்து இங்கு அணி திரண்டுள்ளோம்.நாம் இந்த உலகுக்கு ஒரு செய்தியைப் பிரகடனப் படுத்துகின்றோம்.''இனியும் எம்மால் இழுபட முடியாது. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும் இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் செல்லுங்கள்''.

நமது இயல்பு வாழ்க்கையை நாம் கட்டியெழுப்ப வசதியாக போதிய அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று வேண்டும். நிலம்,நிதி, காவல்துறை, நீதி போன்ற அதிகாரங்கள் முறையாக உள்ளடக்கப்பட்ட இடைக்கால அரசை, ஸ்ரீலங்கா அரசு எங்களது ஏகப்பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளிடம் உடனடியாகக் கையளிக்க வேண்டும்.

நாம் சொல்லுகின்ற இத்தகைய அதிகாரங்களுக்குக் குறைவான எந்த ஒரு இடைக்காலக் கட்டமைப்பையும் (10ம் பக்கம் பார்க்க)

### எமது நிலம் எமக்கு வேண்டும் - இராணுவமே வெளியேறு

# வவுனியாவில் பொங்கு தமிழ்

# மக்கள் பிரவாகம்- பேரெழுச்சி!

## நகரம் இந்திர விழாக் கோலம்

(வவுனியாவிலிருந்து நமது விஷேட நிருபர்)

வரலாறு காணாத மக்கள் பிரவாகம் பேரெழுச்சியுடன் ஆர்ப்பரிக்க, ''எமது நிலம் எமக்கு வேண்டும்'' என்ற தொனிப் பொருளைப் பறைசாற்றி, வவுனியாவில் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வு நேற்று உணர்வெழுச்சியுடன் இடம் பெற்றது.

தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து வவுனியாவில் திரண்ட மக்கள் கூட்டம், அலை அலையாகப் பரவி தமது உணர்வை எழுச்சியுடன் வெளிப்படுத்தினர்.வவுனியா எங்கும் அலங்கார வளைவுகள், பதாகைகள், சிவப்பு மஞ்சள் கொடிகள், பாரிய கட்டவுட்டுகள் மற்றும் மின் ஒளி அலங்காரம், எழுச்சிக் கீதங்கள் என நகரம் இந்திர விழாக் கோலம் பூண்டிருந்தது. (10ம் பக்கம் பார்க்க)

## கிரனைட் வெடித்ததில் தாயும் மகளும் கோரப்பலி

(வவுனியா)

வவுனியா செங்கடிப்பிளவில் இடம் பெற்ற கிரனைட் வெடிச் சம்பவம் ஒன்றில் தாயும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்று மாலை 6 மணியளவில் இத்துயரச் சம்பவம் நடைபெற்றது. சம்பவத்தில் இராசையா மனோன்மணி (வயது-42) இவரது மகள் டியூலா (வயது-6) ஆகிய இருவருமே பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர்.

அநாதரவாகக் கிடந்த கிரனைட்டை எடுத்து பரீட்சிக்க முற்பட்ட போதே கிரனைட் வெடித்தது. சம்பவத்தில் சிவலிங்கம் அஞ்சலா (வயது30) இவரது மகன் துஷ்யந்தன்(வயது 7) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த)



நிகழ்வில் பேரணியாகப் புறப்பட்ட மக்கள்

### சமஷ்டி பற்றி ஆராயவருமாறு

## முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழுவுக்கு இந்தியா-பிரிட்டன் அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் பொழுது முஸ்லிம்கள் தனித்தரப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கலந்து கொண்டு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக முஸ்லிம்களின் யோசனையை தனியாக முன் வைக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கடந்த நான்கு மாதங்களாக முஸ்லிம் காங்கிரஸ் சட்டத்தரணிகளையும் கல்விமான்களையும் கொண்ட அரசியலமைப்புக் குழு ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நியமித்து ஆராய்ந்து வந்துள்ளார். இக்குழு இலங்கையில் உள்ள அரசியல் அமைப்புச் (10ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு அமைதிப்படை நாளை இலங்கை வருகிறது

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் உள்ளூர் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுக்கு உதவி மற்றும் ஆலோசனை வழங்குவதற்கென அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, இந்தியா, கானா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், கென்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அமைதிப் படைப் பிரதிநிதிகள் 11 பேர் நாளை இலங்கைவரவுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து பிரதமர் ரணில் வாஜ்பாய்க்கு விளக்கம்

### நியூயோக்கில் இருவரும் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபைத்திட்ட வரைபு குறித்து நான் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். இதன் பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

நியூயோக்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு அங்கு சென்றுள்ள இரு நாட்டுப் பிரதமர்களும் சந்தித்த போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### நாடக நூல்கள்

"சங்குநாதத்தில்" கலாபூஷணம அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய "ஏகலைவன்" கட்டுரையை வாசித்தீர்களா?அவரது நாடக நூல்கள்:

1. நாடகம் எழுதுவது எப்படி?
2. யாழ்ப்பாணமா?கொழும்பா?
3. எங்கள் நாடு
4. இலக்கிய விமர்சனம் (7488)

## முத்தமிழ் விழா

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முத்தமிழ் விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவை முன்னிட்டு இக்கல்லூரியில் தரம் 6 முதல் உயர்தரம் வரை கல்வி பயிலும் மாண்வர்களுக்கான தமிழ்மொழி அறிவுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. (உ-71)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 860 பேர் பயனடைந்துள்ளனர்.

கண்பரிசோதனை, வாய்ப்புற்று நோய் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை என்பன இதில் இடம்பெற்றன.

விழிவெண்படலத்தினால் பாதிப்புற்றிருந்த ஐவரும், நீரிழிவினால் பாதிக்கப்பட்ட நால்வரும், இதன் போது அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், லயன்ஸ கழக மாவட்ட சுகாதாரத் தலைவர் எஸ்.எஸ். அருளானந்தம் ஆகியோர் மருததுவ சேவையினை வழங்கினர்.(உ-16)

## முதியோர் தின விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் முதியோர் மற்றும் சிறுவர் தின விழா எதிர்வரும் 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தம்பாட்டி பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி விழாவில் முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.(உ-75)

## சிறுவர்-முதியோர் தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை,சிறுவர்-முதியோர் தினத்தையொட்டி யாழ். வலயப் பாடசாலை மாணவர்களிடையே கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

"சிறுவர் உரிமைகளை மதித்தல் முதியோரைப் பேணுதல்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. (உ-7)

## மாடுகளுக்குத் தடுப்பூசி

(வேலணை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு மாடுகளுக்கு அடுத்த இரு வாரங்களுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்றும்,நாளையும் எதிர்வரும் 27ஆம் திகதியும் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலும், முதலாம் திகதி ஒலுவில் வீதியிலுள்ள கால்நடை வைத்திய உப-அலுவலகம்,செபஸ்ரியார் கோவிலடி, சண்முகநாதன் பாடசாலை மற்றும் பொன்னையா கடைச்சந்தி ஆகிய இடங்களிலும்,3ஆம் திகதி செருக்கன் சந்தி, நாரந்தனை வடக்கு தபாற கந்தோர், நாரந்தனை கமநல கேந்திர நிலையம் மற்றும் தம்பாட்டி அம்மன் கோவிலடி ஆகிய பகுதிகளிலும், 4ஆம் திகதி புளியங்கூடல், சுருவில் பகுதிகளிலும் மாடுகளுக்கான மேற்படி தடுப்பூசி வழங்கப் படவுள்ளது.

எனவே,சகல மாடு வளர்ப்போரும் தமது மாடுகளுக்கு தவறாது மேற்படி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியை வழங்குமாறு வேலணை கால்நடை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (உ-11)

## புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தினால் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ள புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சங்கானை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த 30 பாடசாலைகளில் இருந்தும் சுமார் 556 மாணவர்கள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.மேற்படி பரீட்சை திட்டமிட்டபடி, யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி இந் துக்கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் மற்றும் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார். (உ-103)

## இந்த நிலை மாறுவது எப்போது...?




## றொய்கா உதவி வழங்கும் மாநாட்டில் முதல் தடவையாக இலங்கையும் பங்கேற்கிறது

நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள "றொய்கா" உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் முதன் முறையாக இலங்கையும் கலந்து கொள்ளவுள்ளது.

அமைச்சர் மிலிந்த மொறகொட மேற்கொண்டு வந்த தீவிர முயற்சிகளின் பலனாகவே இதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாநாட்டில் தனவந்த நாடுகள் பலவும் கலந்து கொள்ளவுள்ளதால்,இலங்கைக்கு மேலும் நிதியுதவிகள் கிடைக்கவுள்ளதோடு அந்த நாடுகளுடனான நல்லுறவும் பேணபபடும் வாய்ப்புக்கள் உருவாக்கியுள்ளன.இந்த மாநாட்டில் அபிவிருத்தி அடைந்து வரும் சிறிய நடுத்தர நாடுகளை இணைத்துக் கொள்வதில்லையாயினும்,டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டின் மூலமாக இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது. இம் மாநாட்டில் இலங்கை கலந்து கொளவதன் மூலம் ஐரோப்பிய யூனியன், ஐரோப்பிய கவுன்ஸில், ஐரோப்பிய கமிஷன் ஆகியவற்றுடனும் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை,"றொய்கா" மாநாட்டின் மூலம் கிடைக்கப் பெறும் நிதியுதவிகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு நோர்வே ஊடாக பயன்படுத்தப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-18)

## ஆசிரிய மாணவர்களுக்கு மனித உரிமைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆங்கில பாடநெறி ஆசிரிய மாணவர்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மனித உரிமைகளைப் பேணுதல் தொடர்பான ஆங்கில மொழிமூல கருத்தரங்கு அண்மையில், நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இடம்பெயர் சேவை திட்ட அதிகாரி வேளினி தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில், மாணவர்களின் உரிமைகளை மதித்து நடத்தல் அவர்களுடனான அணுகுமுறைகள் தொடர்பான கருத்துக்கள், விளக்கங்கள் என்பவற்றையும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர அளித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் பற்றியும் இதில் விளக்கிக் கூறப்பட்டது.

(உ-4)

## சிறுவர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட சண்டிலிப்பாய்க் கோட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

சிறுவர் தினத்தையொட்டி சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. போட்டி முடிவுகள் வருமாறு.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்:- அ.ஆன்சிந்து (மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க.த.க.பாடசாலை),
இரண்டாம் இடம்:- ஸ்ரீ.சுபாங்கன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி),
மூன்றாம் இடம்:- நா.சுலக்சிகா (இளவாலை கன்னியர்மடம் ம.வி).

**மத்தியபிரிவு**

முதலாம் இடம்:- செ.சசிகரன் (நவாலி மகா வித்தி.),
இரண்டாம் இடம்:- பா.அஜந்தன்(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை),
மூன்றாம் இடம்:- இ.சத்தியசீலன் (பணடத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை).

**மேற்பிரிவு**

முதலாம் இடம்:- து.கமல்ராஜ்(மானிப்பாய் இந்துக் கல்லூரி),
இரண்டாம் இடம்:- சி.வெனிஸ்ரலா(பணடத்தரிப்பு இந்துக் கல்லூரி),
மூன்றாம் இடம்:- சி.தனுஜா(மானிப்பாய் மகளிர் கல்லூரி).

(உ-103)

## யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்களை சர்வதேச தரத்திற்கு பயிற்றத் திட்டம்

### தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களில் அங்கத்துவம் வகிக்கும் முன்னணி வீரர்களைத் தெரிவு செய்து அவர்களை தேசிய மட்டத்தில் பயிற்றுவிப்பதற்கு தமிழீழ விளையாட்டுத்துறை முயன்று வருகிறது.

அதன் முன்னேற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பெறுப்பாளர் மாதுளன், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைத் திணைக்கள அதிகாரி றொகான் ராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களிலும் அங்கம் வகிக்கும் வீரர்களில் சிறந்த வீரர்களை தெரிவு செய்து அவர்கள் சார்ந்த விளையாட்டில் சிறந்த பயிறசிகளை வழங்கி அவர்களைத் தேசியத் தரம் வாய்ந்தவர்களாக உருவாக்குதல்,

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர்காலத்தில் வெளிநாட்டில் நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் பங்கு பெறச் செய்து தமிழீழ விளையாட்டு வீரர்களின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பில இதில் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட விளையாட்டு வீரர்களை இதற்குத் தெரிவு செய்யும் விடயத்தில் வீரர்களும், விளையாட்டுக் கழகங்களும் விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்து கொள்ளுதல் அவசியம் எனவும் இதில் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-4)

## இலவச கண் பரிசோதனை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை மகாத்மா சனசமூக நிலையத்தில் இன்று வியழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணி வரை இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

(உ-201)

## வெளிநாடு சென்ற இலங்கைப் பெண்கள் சொல்லொணாத் துயரம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடி சவுதி அரேபியாவின் றியாத் நகருக்குச் சென்ற 70 இலங்கைப் பெண்கள் அங்குள்ள வேலை வாய்ப்பு முகவர் ஒருவரின் வீடொன்றில் வைத்துக் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வேலைதேடி றியாத் நகர் சென்று அங்கு சித்திரவதைகள் பல அனுபவித்துக் கொண்டிருந்தவேளை மாத்தளையைச் சேர்ந்த ரோகினி சூரதிஸ்ஸ என்ற பெண் அங்கிருந்து தப்பி வந்துள்ளார். சித்திரவதைக்கு உள்ளாகிய அவர் தற்போது மாத்தளை ஆதார வைத்தியசாலையில் சிகிசசை பெற்று வருகின்றார்.

றியாத்திலுள்ள பணிப்பெண்களின் நிலைபற்றி அவர் கருத்துத் தெரிவிகையில்,

இங்கிருந்து வேலை தேடிச் செல்லும் பெண்கள் அங்கு பணிபுரியும் வீடுகளில் வீட்டு உரிமையாளர்களால பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

அந்த வகையில், நானும் பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அங்குள்ள வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தில் முறையிடச் சென்றேன்.

முகவர் நிலையத்தில் என்னைப் போல் வேலை தேடிவந்த சுமார் 70ற்கும் மேற்பட்ட பெண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதை என் கண்ணால் கண்டேன். அதன் பின்னரே அங்கிருந்து வேறு வழியில தப்பித்து நான் இலங்கை வந்து சேர்ந்தேன் எனக்குறிப்பிட்டுள்ளார்.(உ-18)

## தொழிற்துறை நிலையங்கள் நாளை பூட்டு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்து சிகை அலங்கரிப்பாளர் நிலையங்கள், வணிக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், விடுதிகள், சலவைத் தொழிலகங்கள் மற்றும் ஏனைய தொழில்துறை நிலையங்கள் என்பவற்றை தியாகி திலீபனுடைய நினைவு நாளான நாளை மூடி, அன்று அந்தக் கோட்டங்களில நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (உ)

அன்பு மாணவர்களே!



உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரி காலத்தில்

வலம்புரியில் வெளிவரும்

நவராத்திரி பாமாலைக்கு

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை

மு.குறிப்பு: மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப் படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை பாடசாலையின் பெயருடன் அனுப்பி வைக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

நவராத்திரி பாமாலை

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

# ஆசிய மெய்வல்லுநர் போட்டியில்
# இலங்கை சோபிக்கவில்லை

### ஒற்றைத் தங்கத்துடன் வீரர்கள் நாடு திரும்பினர்

பிலிப்பைன்சின் தலைநகரான மணிலாவில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த 15வது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் ஒவ்வொன்றை இலங்கை வென்றெடுத்துள்ளது.

ஆண்களுக்கான 4x400 மீற்றா அஞ்சல் ஓட்டப்போட்டியில் இலங்கை தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

3 நிமிடங்கள் 03:05 செக்கனகளில் இந்தத் தூரத்தை ஓடி முடித்த இலங்கைக்குழு தங்கத்தைத் தம் வசமாக்கியது.

இலங்கை அஞ்சல் ஓட்டக்குழுவில் சுகத் திலகலட்ண, றங்கவிமலவன்ச, றொகான் பிரதீப்குமார, பிரசன்ன அமரசேகர ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இதேவேளை, பெண்களுக்கான ஈட்டியெறிதல் போட்டியில் ஆன் மெக்கேசி டீசில்வா வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் சுஜீவா நில்மினி வெள்ளிப்பதக்கம் வென்றெடுத்தார்.

எனினும், சென்ற ஆண்டு 14வது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகள் இலங்கை சுகதாஸ விளையாட்ரங்கில் நடைபெற்றபோது, இலங்கை வீர, வீராங்கனைகள் பெற்றுக்கொண்ட வெற்றிகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை மிகக் குறைவான வெற்றிகளே கிடைத்திருக்கின்றமையானது விளையாட்டு ஆர்வலர்களைச் சற்றுச் சோர்வடையச் செய்திருக்கின்றது. (உ-68)

## சர்வதேச கிரிக்கெற் பேரவை
## இலங்கைக்கு சுற்றுப்பயணம்

சர்வதேச கிரிக்கெற் பேரவைத் தலைவர் இசான்மணி மற்றும் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம்ஸ்பீட் உள்ளிட்ட விசேட குழுவினர் தற்சமயம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களது இந்தச் சுற்றுப் பயணத்தின் போது இலங்கையின் கிரிக்கெற் எதிர்காலம் குறித்து விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெற் பேரவைத் தலைவர் குழுவிற்கும், இலங்கை துறைசார்ந்த உயர் அதிகாரிகள் குழுவிற்குமிடையில் விசேட சந்திப்பு ஒன்றை நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெற் துறையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அனுரா தென்னக்கோன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் கலந்துகொள்ளும் நாடுகளின் எதிகால முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கே சர்வதேச கிரிக்கெற் பேரவையின் விசேட குழுவினர் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர். (உ-68)

# தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்





### உன் கனவு நனவாகும்

பாரதத்தில், பாரத காவியத்தில் பார்த்தீபன்
நேருகின்ற யுத்தத்தில் நேர்வழியைப் பெற்றிடவே
போதித்தான் கீதைதனைப் புகழ்பூத்த கண்ணபிரான்
சோதித்தான் இங்கெங்கள் பார்த்தீபன் ஈழத்தில்
வேதனையைத் தாங்கித்தமிழ் மேதினியை வாழவைக்க
நீதி வழிநின்று நேர்மை தனைக்காத்து
அண்ணல் காந்தியின் அகிம்சை வழிச்சென்று
உண்ணா விரதத்தால் ஓங்குதமிழ்க் குயிர்ஈய்ந்தான்
பாரதத்தில் கண்ணபிரான் போதனையில் பார்த்தீபன்
வீரத் தமிழ்ஈழம் மேலோங்க வளம்பெறத்தான்
தானைத் தலைவன் பிரபாவின் போதனையில்
ஆணைபெற்றான் ஆமெம்பார்த் தீபனாம் திலீபன்
பன்னிரெண்டு நாட்கள் பகலிரவாய்த் தமிழர்க்காய்
முன்னின்று உண்ணா விரதத்தால் உயிர்நீத்த
தியாகத் திருவுருவே திலீபா! உன் நினைவு
உயிரோடு கலந்து உறைந்துள்ளதெம் உள்ளத்தில்
இந்திய ராணுவம் எக்காளம் இட்டதனால்
முந்தி நிபந்தனை வைத்து முனைந்த இடரெமக்கு
ஒடித்திடவே உயிர்விட்டாய் உத்தமனே! தியாகி நீ
வடித்ததுயர் எமக்காய் மங்காது மாநிலத்தில்
உன்கனவு நனவாகும் ஓங்கியுன் பெயர்நிலைக்கும்
மன்னும் தமிழ்உள்ள காலம்வரை மக்கள்
மறவார்! மறவார்!! மறவாரே!!! ஆமுண்மை
உறைவாய் நீயென்றும் எம்உள்ளக் கூட்டினிலே
வாழும் உன் நாமம் வளம்

கச்சாயூர்ப் பண்டிதர் கவிஞர் சுகசீவன்

# விளையாட்டுச் செய்திகள்

## குத்துச்சண்டை வீரர்களுக்குப் பிற்காலத்தில் மனநோய் ஏற்படும் வாய்ப்புண்டா?

பிரிட்டன் முன்னாள் உலக அதிபாரகுத்துச்சண்டை சம்பியனான பிரான்ஸ் புறுனோ மனநோய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான புறுனோ, மனநோயினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக எக்ஸ். எக்ஸ்.இல் உள்ள மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புறுனோ தான் கலந்துகொண்ட 45 குத்துச்சண்டைப் போட்டிகளில் 40 போட்டிகளில் வெற்றிவாகை சூடியவர் என்பதும் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டியின் போது இவர் மைக்டைசனிடம் தோல்வியைத் தழுவிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்துக் குத்துச்சண்டை வீரர்களுக்குப் பிற்காலத்தில் மனநோய் ஏற்படுகின்றதா? என்பது பற்றி தற்போது வைத்தியர்கள் ஆய்வு நடத்தத் தொடங்கியுள்ளனர்.

போட்டிகளில் மூர்க்கத்தனமாக சண்டையிடுவதானது அவர்களின் மனநிலைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதைப் பொதுவாக மருத்துவ உளவியலாளர்கள் முன்னரே தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## டெஸ்ற் ஒவ் இந்தியா அணி
## வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது

சென்னை சிதம்பரம் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்திய முதல்தர கிரிக்கெற் போட்டிகளில் டெஸ்ற் ஒவ் இந்திய அணிக்கும், மும்பை அணிக்கும் இடையில் நடைபெற்ற 5நாள் டெஸ்ற் கிரிக்கெற் போட்டியில் டெஸ்ற் ஒவ் இந்தியா அணி வெற்றிபெற்றுள்ளது.

இரண்டாவது இன்னிங்சிற்காக 340 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய டெஸ்ட் ஒவ் இந்தியா அணி, 3 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் மும்பை அணியை வெற்றிகொண்டு கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இரண்டாம் இன்னிங்சிற்காக டெஸ்ஒவ் இந்தியா அணிசார்பாக நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான ராகுல்ட் ராவிட் 121 ஓட்டங்களையும், வி.வி. எக்ஸ்.ஸஷ்மன் 99 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்துத் தமது அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றனர்.

மும்பை அணி அதன் முதல் இன்னிங்சில் 297 ஓட்டங்களைப் பெற்றது. அதில் சச்சின்டெண்டுல்கர் 94 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

மும்பை அணி இரண்டாம் இன்னிங்சில் 244 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின்டெண்டுல்கர் 50 ஓட்டங்களையும், ரமீஸ்பவர் 57ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

டெஸற்ஒவ் இந்தியா அணி முதல இன்னிங்சில் 202ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்ட போதிலும் இரண்டாம் இன்னிங்சில் 7விக்கெற்றுக்களை இழந்து வெற்றிஇலக்கான 340 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டெஸ்ற் ஒவ் இந்திய அணிக்காக இரண்டாம் இன்னிங்சில் ராகுல் ராவிட்121 ஓட்டங்களையும், வி.வி.எக்ஸ்.லஷ்மன் 99ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (உ-68)

## வெற்றிக் கிண்ணம்
## பொலிஸ் அணிக்கு

மட்டக்களப்பில் நடைபெற்ற வெபர் ஞாபகார்த்தக் கிண்ண கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொழும்பு மாவட்ட பொலிஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் புனித மைக்கல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இம்முறை நடைபெற்ற போட்டியில் கொழும்பு, திருகோணமலை உட்பட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பிரதான கூடைப்பந்தாட்ட அணிகள் கலந்துகொண்டன.

இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 22ஆம் திகதி முன்னிரவு புனித மைக்கல் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின்னொளியில் நடைபெற்றது. இவ் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மைக்கல் மென் அணியும், கொழும்பு பொலிஸ அணியும் மோதின.

விறு விறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் கொழும்பு பொலிஸ் அணி 90:63 என்ற புள்ளிகள் அடிப்படையில் மட்டக்களப்பு மைக்கல் மென் அணியை வெற்றிகொண்டதுடன் 2003ஆம் ஆண்டுக்கான வெபா கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொணடது. (உ-68)

## நிதி திரட்டும் போட்டியில்
## பங்கேற்க அக்ரம் விருப்பம்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் வசீம் அக்ரம் நிதிதிரட்டும் கிரிகெற் போட்டியொன்றில் விளையாடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்

இந்த வருட ஆரம்பத்தில் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றிருந்த போதும், முன்னாள் கிரிக்கெற் வீரரும், அக்ரமின் சகவீரருமான சொய்ப் முகமட்டிற்காக இந்த நிதிதிரட்டும் நலன்புரி கிரிக்கெற் போட்டியில் விளையாடுவதற்குத் தான் எண்ணியிருப்பதாக வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்

தென்னாபிரிக்க அணிக்கெதிராக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில பங்கேற்க ஏதுவாக தனது உடல் நிலை திடமாக இருப்பதாகவும், பயிற்சிகளை ஒழுங்காக மேற்கொண்டு வருவதாகவும் அக்ரம் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணியின் பாகிஸ்தான் சுற்றுப் பயணம், பாகிஸ்தானின் கராச்சி நகரில ஏற்பட்டுள்ள குண்டு வெடிப்புக் காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளமை அறிந்ததே. எனினும் இந்த சுற்றுப் பயணம் பற்றித் தென்னாபிரிக்கக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை தனது இறுதி முடிவை இன்று அல்லது நாளை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ-68)

## இந்திய டெனிஸ் அணிக்கு
## தோல்வி மேல் தோல்வி

டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டிகளின் தகுதிகாண் சுற்றில் இந்திய அணி 5:0 என்ற புள்ளிகள் கணக்கில் நெதர்லாந்து அணியிடம் தோற்றுப் போயுள்ளதுடன் தகுதிகாண் போட்டியின் அடுத்த சுற்றிற்குத் தெரிவாகாமல் வெளியேறியுள்ளது.

கடந்தவார இறுதியில் அம்ஸடாமில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் இந்திய அணி நெதர்லாந்து அணியிடம் தோல்வியடைந்தது.

இதேவேளை, இந்த போட்டிகளில் இந்தியாவின் முன்னாள் டெனிஸ் வீரர் விஜய் அமிர்தராஜின் புதல்வரும் இந்திய அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

# ஐ.நா.வின் முதல் நாள் கூட்டத்திலேயே அமெரிக்க-பிரஞ்சுத்தலைவர்கள் மோதல்

## ஈராக்கை மீளக்கட்டியெழுப்ப அதிபர் புஷ் அழைப்பு

(நியூயோர்க்)

ஐ.நா.பொதுச்சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய முதல் நாள் கூட்டத்திலேயே ஈராக்



பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

போரின்ல் பாதிக்கப்பட்ட ஈராக்கில ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வர அவசரப்படக்கூடாது என்று அமெரிகக அதிபர் புஷ் பேசி னார். ஆனால், ஈராக்கில் யு.எஸ் மற்றும் பிரிட்டிஷ் படைகள் நீடித்திருப்பதற்குக் காலக்கெடு விதிக்க வேண்டும் என்று பிரெஞ்சு அதிபர் ஜாக்ஸ் ஷெராக் பேசுகையில் வலியுறுத்தினார்.

ஐ.நா.சபையின் ஒப்புதலைப் பெறாமலேயே ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததை அவர் குறை கூறினார். மற்ற நாடுகளின் நலனுக்காக என்று கூறிக்கொண்டு ஒரு நாட்டின் மீது போர் தொடுக்க தன்னிச்சையாக யாரும் முடிவு எடுக்க முடியாது என்றார் அவர்.

ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனான் விவாதத்தைத் தொடக்கி வைத்துப் பேசினார். ஈராக் மீது புஷ் போர் தொடுத்தது, உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றார் அவர்.

ஈராக்கில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவரும் முயற்சிக்கு உலக நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் கேட்டுக்கொண்டார்.

ஈராக்கில் அமைதியை பாதுகாக்கவும், ஐ.நா.வின் சிறப்பியல்பை நிலைநாட்டவும் கூட்டணிபடைகள் செயல்பட்டன. என்று கூறிய அதிபர் புஷ்,ஈராக் யுத்தம் தொடர்பான முரண்பாடுகளைப் பின்தள்ளிவிட்டு காயமுற்றுள்ள அந்நாட்டை மீளக்கட்டி எழுப்பி நிலை நிறுத்த அனைவரும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தற்பொழுது ஈராக் என்ற தேசத்துக்கு எமது உதவியும், நல்லெண்ணமும் தேவைப்படுகின்றது. நாம் முன்வந்து அந்த ஆதரவை வழங்க வேண்டும் என்றார்.

ஈராக்கின் தன்னாட்சிக்கு ஐ.நா. நிறுவனம் பெரிதும் உதவ முடியும் ஆனால் ஈராக்கில் ஐ.நா.அதிகபட்சமாக ஈடுபடவேண்டும் என்று தாம் கருதவில்லையென்றார்.


வேறு பிரச்சினைகளில் அவை முடிந்தபின் செயல்படுவது போன்று ஈராக் விடயத்திலும், அரசியல் அமைப்பை முன்னேற்றுவது, சிவில் சேவையாளர்களைப் பயிற்றுவிப்பது, நீதியான சுதந்திரமான தேர்தல்களை நடத்துவது போன்ற விடயங்களில் ஐ.நா.பணியாற்ற வேண்டும் என்று புஷ் கேட்டுக் கொண்டர் பிரஞ்சு அதிபர் ஷெராக் பேசுகையில்,

ஈராக் உட்பட உலக நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை பன்னாட்டு ஐ.நா.போன்ற அரங்கங்களிலேயே அலசப்படவேண்டும், ஏனென்றால் இங்குதான் ஆயுதப் பாவனை, மற்றும் உலக நியமங கள் பற்றிய சட்டமுறைகள், ஜனநாயகம்,போன்றவை உறுதிப்படுத்தப் படுகின்றனவென்றார்.


எந்தநாடும் பலாத்காரத்தை பிரயோகிப்பதற்கு தன்னிச்சையாக முடிவெடுக்கலாகாது. தனிமையாகவும் செயல்படக்கூடாது என்று அவர் மேலும் கூறினார்.

உரைகளின் பின்னர் இருதலைவர்களும் மகாசபையின் இடைவெளி நேரத்தில் சந்தித்துக் கொண்டனர் என்றாலும் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவில்லை.

ஈராக்கில் அமெரிக்கர் வெற்றி பெறவேண்டும் என்று நாம் கருதுகி




றோம். அவர்களின் சிந்தனைக்கு நாங்களும் எமது பங்களிப்பை வழங்க விரும்புகிறோம் என்று ஷெராக் நிருபர்களிடம் கூறினார்.(பி)



ஓரிசாவில் அவுஸ்திரேலியப்பாதிரியார் கிரகாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியான தாராசிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாராசிங்கே இவர். இவருடன் மேலும் 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

(பி-2)

## பாலில் விஷம் கலந்து அதிகாரியைக் கொல்ல முயற்சி சிறுவன் மீது விசாரணை

(ஹைதராபாத்)


ஆந்திரத்தில் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு பாலில் விஷம் கொடுத்து கொல்ல முயற்சி நடந்தது தொடர்பாக 10 வயது சிறுவனிடம் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

ஆந்திரப் பிரதேச அரசின் பொது நிர்வாகத் துறையில் முதன்மைச் செயலராக இருப்பவர் ஜி.முரளி கிருஷ்ணா. இவர் ஹைதராபாதில் பஞ்சாரா ஹில்ஸ் பகுதியில் வசித்து வருகிறார். இவரது வீட்டில் வேலைசெய்யும் 10 வயது சிறுவன் ராமு, திங்கட்கிழமை இரவு முரளிகிருஷ்ணாவுக்கு பால் கொடுத்துள்ளான். பாலின் நிறம் காவி நிறமாக இருந்ததால் சந்தேகம் அடைந்த அவர். சிறுவன் மீது பொலிசில் புகார் செய்தார்.

பொலிசார் சிறுவனிடம் விசாரணை செய்ததில், கடந்த 3 தினங்களுக்கு முன் அதிகாரியால் வேலைநீக்கம் செய்யப்பட்ட ராமுலு என்பவரின் யோசனையின்பேரில் அவர் கொடுத்த பவுடரை பாலில் கலந்துகொடுத்ததாக பொலிசில் சிறுவன் ஒப்புக்கொண் டான்.

அவ்வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட போத்தலில் இருந்த பவுடரும், பாலும் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(பி)



சென்னை கோயம்பேடு சந்தையில் காய்கறி அங்காடியில் கடந்த திங்கட்கிழமை விற்பனைக்கு வந்த நாகக்கத்தரிக்காய்.

## கண்ணப்பன் - ஜெயலலிதா மோதல்:

# வாஜ்பாயி-அத்வானி சண்டை; கருணாநிதி வர்ணனை

(சென்னை)

மத்திய அமைச்சர் கண்ணப்பனை பொடா சட்டத்தில் கைது செய்வது குறித்து பிரதமர் வாஜபாயிக்கு முதல்வர் ஜெயலலிதா எழுதிய கடிதம், பிரதமருக்கும், பிரதமராக வர விரும்புபவருக்கும் நடக்கும் சண்டை; இச் சண்டையில் நான் என்ன செய்ய முடியும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார். பிரதமர் வாஜ்பாஜையும் உதவிப் பிரதமர் அத்வானியையுமே கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

சென்னையில் நிருபர்களிடம் செவ்வாய்க்கிழ்மை அவர் கூறியதாவது:

மத்திய அமைச்சரைக் கைது செய்ய மாநில அரசுக்கு உரிமை உண்டா என்று தெரியவில்லை. என்னுடைய அனுபவத்தில் இது போன்ற நிகழ்ச்சிகளை நான் கண்டதில்லை. இதுகுறித்து சட்டத்தைப் படித்து தெளிவாக உணர வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை.


பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தமிழக ஆட்சியாளர்கள் அதை மேலும், மேலும், தவறாகப் பயன்படுத்த முனைகிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இச்சட்டத்தைத் திரும்பப் பெற இயலாது என்பது பா.ஜ.க. நிலைப்பாடு என்றால், இது போன்ற விளைவுகளைச் சந்திக்க வேண்டியதுதான்.

இவ்விடயத்தில் எங்களுடைய கருத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம். இச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்து பெரும்பான்மை பலத்தோடு அது நிறைவேற்றப்பட்டபோதே. அதனால் ஏற்படக்கூடிய தீமைகளையும் எடுத்துரைத்தோம்.

இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டால் அது கண்டிக்கத்தக்கது என்று பிரதமர் வாஜபாயும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பிரதமருக்கு நினைவுபடுத்த விரும்புவது, ஒரு காலத்தில் ராஜீவ் காந்தி கொண்டு வந்த தடா சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் என்று போராடிய பா.ஜ.க.வினர், தற்போது தாங்கள் கொண்டுவந்த பொடா சட்டத்தின் விளைவுகளை அறிந்திருந்தும் அதைத் திரும்பப் பெற மாட்டோம் என்பது ஏற்கத்தக்கதல்ல என்றார் கருணாநிதி.(பி-2)



செப்டெம்பர் 27-ம் தேதி தொடங்கும் மைசூர் தசரா விழாவையொட்டி மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலிக்கும் மைசூர் அரண்மனை.


உலக தரிசனம்

### இந்திய படையினரின் துப்பாக்கி வேட்டுக்கு 12பாகிஸ்தானியர்கள் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரின் பூஞ் மாவட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமர் ஒன்றில் 12பாகிஸ்தான் படைவீரர்கள் கொல்லப்பட்டதுடன் 8பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் படையினர் இந்தியப்படையினர் மீது முதலில் துப்பாக்கி வேட்டுக்கள்ளத் தீர்த்ததையடுத்து, இந்திய படைவீரர்கள் மேற்கொண்ட எதிர்த்துப்பாக்கி தாக்குதலிலேயே பாகிஸ்தான் படைவீரர்கள் 12பேரும் கொல்லப்பட்டனர்.(பி-2)



லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற 55-வது நட்சத்திர விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த குழந்தை நட்சத்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட டகோடா ஃபான்னிங் கையில் விருதுடன்.

# செய்தித் துளிகள்

## மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கென வன்னிப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் 70 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

சமாதானச் சூழலைத் தொடர்ந்து மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மீளக் குடியமரும் மக்களின் நலன் புரி அபிவிருத்தித் திட்டங்களுக்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்பு, தொழில அபிவிருத்தித்திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. (தி)

## இரண்டாம் இடம்

(தொல்புரம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 23 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழாவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. (உ-70)

## மாகாணமட்ட போட்டிக்குத் தெரிவு

(தொல்புரம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட இவ்வருடத்திற்கான கணித, விஞ்ஞானப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி பு.தேவரஞ்சனா முதலாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (உ-70)

## குழிகளில் வீழ்ந்தவர்கள் படுகாயம்

(காரைநகர்)

தேசிய வீடமைப்பு நீர்வழங்கல் சபையினரின் அசமந்தப் போக்கினால் காரைநகரில் கடந்த வாரத்தில் இருவர் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தேசிய வீடமைப்பு நீர்வழங்கல் சபையினால் காரைநகரில் நீர்ப்பாசனத் திட்டவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், சிவகாமி அம்மன் வீதியோரம் நீர் விநியோகக் குழாய்கள் புதைப்பதற்காக குழிகள் வெட்டப்பட்டு வருகின்றன.

இக்குழிகள் வெட்டப்பட்டுப் பல நாட்களாகியும் மூடப்படவில்லை. இதனால், இக்குழிக்குள் விழுந்து இருவர் படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்துக்கள் தொடர்பாக நீர் வழங்கல் சபையின் காரைநகர் திட்ட அலுவலகத்தில் பொதுமக்களால் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-246)

## விதவைகளுக்கு உதவுபொருட்கள்

(சில்லாலை)

சாந்தை பண்டத்தரிப்பில் உள்ள விதவைக் குடும்பங்களுக்கு இத்தாலியின் ''மூவி மொண்டோ'' நிறுவனம் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளவென உதவிகளை வழங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி தெரிவுசெய்யப்பட்ட 15 விதவைகளுக்குக் கடந்த புதன்கிழமையன்று கோழி வளர்ப்பதற்கான கூடுகளை வழங்கியுள்ளது. தொடர்ந்தும் இந்நிறுவனம் உதவிகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-58)

## கணனிப் பயிற்சி நிலையம்

(கந்தரோடை)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் வகையில், வட-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, புதிய கணனிப் பயிற்சி நிலையம் ஒன்றை அப்பாடசாலையில் உருவாக்குவதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி இந்நிதியின் மூலம் புதிய கணனிப்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-103)

## உயர் நீதிமன்ற நீதியரசர் காலமானார்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியர்சர் டி.பி. எஸ். குணசேகர கடந்த திங்களன்று தனது 62ஆவது வயதில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார்.

கடந்த 3 மாதகாலமாக நோய் வாய்ப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இவர் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி தர்மராஜ வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், இளம் வயதிலேயே சட்டத்துறையில் சேவையாற்றி அரச சட்டவாதியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றினார்.

சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்ற இவர் கடந்த 6 வருடங்களாக உயர் நீதிமன்ற நீதி அரசராகப் பதவிவகித்து வந்தார். (உ-6)

## போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

மோட்டார் போக்குவரத்துச் சம்பந்தமாகத் தற்போது ஏற்பட்டுவரும் வீதிவிபத்துக்கள், வாகன நெரிசல்கள் என்பனவற்றைத் தவிர்க்கும் நோககுடனேயே இச்சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

வாகனப்பதிவு, காப்புறுதி, சாரதிகளுக்கான பயிற்சி, சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் போன்ற சட்டங்களில் சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார். (தி-60)

## தரமற்ற உழுந்து விநியோகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களுக்கான நிவாரணத்திற்கு வழங்கப்படும் உழுந்து தரமற்றது எனக் கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கக் கிளைகளினூடாக நிவாரணத்திற்கென அரிசி, மா மற்றும் சீனியுடன் பாவனைக்கு ஏற்றதல்லாத தரமற்ற உழுந்தும் தற்போது வழங்கப்பட்டு வருவதாக அப்பகுதி நிவாரணம் பெறும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-75)

## தொடர்மாடி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தைப் புனரமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

குருநகர் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மேற்படி தொடர்மாடி கடந்தகாலப் போரினால் சேதமடைந்து காணப்படுகின்றது.

சேதமடைந்த நிலையில் காணப்பட்டாலும், இதில் மக்கள் தங்கி வாழ்வதனால், இதனை அடுத்த மாத முற்பகுதியில் புனரமைப்பதற்குரிய முன்னேற்பாடான நடவடிக்கைகளில் யாழ். செயலகம் ஈடுபட்டு வருகின்றது. (உ-4)

## கோழிகளுக்குத் தொற்றுநோய்

(சுழிபுரம்)

கோழிகளுக்கான தொற்றுநோய் தற்போது சுழிபுரம் பிரதேசத்தில் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரியவருகின்றது.

தற்போது இப்பகுதியில் சுமார் 20 கோழிகள் மேற்படி தொற்றுநோயால் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-71)

## விடைத்தாள் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மைய றோட்டரிக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான பொது அறிவு நுண்ணறிவுப் பரீட்சை விடைத்தாள்கள் யாவும் அடுத்தமாதம் 10ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என மேற்படி கழகத்தின் செயற்திட்ட இயக்குநர் அறிவித்துள்ளார். (உ-18)

## கூட்டம் ஒத்திவைப்பு

(தொல்புரம்)

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இக்கூட்டம் இம்மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் என பிரதேச செயலர் க.கேதீஸவரன் அறிவித்துள்ளார். (தி-70)

## கரையோரச் சமூக அபிவிருத்திக்கு 2700 மில்லியன்

(கொழும்பு)

கரையோரச் சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 2 ஆயிரத்து 700 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இவ் அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 3 சிறிய துறைமுகங்களும் அமைக்கப்படவுள்ளன. (தி)

## ஆங்கிலக் கற்கைநெறி

(நவாலி)

இணுவில் சனசமூக நிலையம் தனது உறுப்பினர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் வகையில், ஆங்கில கற்கைநெறி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு வாரமும் பிரதி சனி, ஞாயிறு பி.ப. 5.00 மணிக்கு இடம் பெறவுள்ள மேற்படி ஆங்கிலக் கற்கை நெறியைப் பயில விரும்பும் இணுவில் சனசமூக நிலைய உறுப்பினர்கள் உடனடியாக இணுவில் பொது நூலக நூலகரிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் எனக் கேட்கப்பட்டுள்ளது. (உ-102)

## நாட்டுக்கூத்து மேடையேற்றம்

(சுதுமலை)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சி.மௌனகுரு தயாரித்த ''நாட்டுக் கூத்து'' ஒன்று அண்மையில் யாழ். உடுவில் மகளிர் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது.

தொடர்ந்தும் இந்நாட்டுக்கூத்து பல இடங்களில் மேடையேற்றப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (பி-252)

## சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(தொல்புரம்)

சட்டஉதவி ஆணைக்குழுவும், நீதி அமைச்சும் இணைந்து நடாத்தும் சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கிராம அலுவலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள், நன்நடத்தை உத்தியோகத்தர்கள், காணி குடியேற்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-70)

## ஆணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் பாறினுக்கும் இடையே ஒருங்கிணைக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றை அமைப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாறின் வெளிவிவகார அமைச்சர் ஷேக் முகமட் அல் ஹபீயை அங்கு சந்தித்துப் பேசுகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ் ஆணைக்குழு ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் தொழிலாளர் பிரச்சினை உட்படப் பலபிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவுள்ளது. (தி-60)

# தபால் சேவை அபிவிருத்திக்கு சவுதி அரேபியா நிதி உதவி

(கொழும்பு)

தபால் சேவையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதியுதவியினை வழங்க சவுதி அரேபியா இணங்கியுள்ளது.

சவுதி அரேபியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காரிடம்,அந்நாட்டு தபால் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி காலிக் சாறிஸ் அல் ஒப்பேஸ் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பில்,தபால் சேவை அபிவிருத்தித் திட்டங்களில் நவீன தொழில் நுட்பச்சாதனங்களையும், கட்டடப்புனரமைப்புப் பணிகளுக்கான நிதி உதவியையும் வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

### கலிபோர்னிய நீதிமன்றத்தால்

# தேடப்பட்டுவந்த இலங்கையர் மேல் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி கலிபோர்னிய நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில், தப்பியோடி இலங்கைக்கு வந்து தலைமறைவாகியருந்த சப்பிரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளரான திலக் ஜயவர்த்தன எனும் அன்ரனி ஜயவர்த்தன கடந்த திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

கலிபோர்னியாவிலுள்ள கிளேணடோ நீதிமன்றம்,இவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்து கைது செய்து நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசிடம் கேட்டதற்கிணங்க,

2002 இல் சி.ஐ.டி.விசேட குழுவினர் நீர்கொழும்பு, ஜாஎல, பலாங்கொட ஆகிய இடங்களில் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதும் இவரை கண்டு பிடிக்க முடியவில்லை.

கடந்த திங்கட்கிழமை சட்டத்தரணி அனில் சில்வா மூலம் இவர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சிறீஸ்கந்தராஜாவின் முன்னிலையில் ஆஜராகியதையடுத்து, இவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான பாலித ரணசிங்க சந்தேக நபருக்குப் பிடியாணை பிறப்பித்துக் கைது செய்துகிளேணடோ நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதி மன்றத்தைக் கேட்டுக்கொண்டார். (உ-6)

# இங்கிலாந்து விரிவுரையாளர் யாழ்.பல்கலையில் உரை

(யாழ்ப்பாணம்)

பௌதீகவியலில் எமக்குத் தெரிந்ததும் தெரியாததும் என்ற தலைப்பில் இங்கிலாந்து பரிஸ்டர் பல்கலைக்கழக பௌதீகவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் டாக்டர் வின்சென்ற் ஸ்மித் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்தில் விரிவுரையாற்றினார்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தூய விஞ்ஞான - ஏ பிரிவின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த விரிவுரையில் பௌதீகவியல் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் பங்கேற்று பயனடைந்தனர். (பி)

# முன்னாள் பிரதி அமைச்சருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணிப் பிரதி அமைச்சர் மேவின் சில்வாவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை ஒன்றைத் தாக்கல் செய்வது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

போலிக்காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கி ஒரு இலட்சத்து 90ஆயிரம் ரூபா நிதி மோசடி செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு, விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இவர் மீது விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ் விசாரணை அறிக்கை தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையை பரிசீலித்து வரும் அரசசட்டத்தரணிகள், முன்னாள் பிரதி அமைச்சருக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை ஒன்றைத் தாக்கல் செய்வது பற்றி விரைவில் தீர்மானிக்கவுள்ளனர். (தி-60)

# வங்கிக் கடன் மீளளிப்பு சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளை மீளப் பெறுவது சம்பந்தமான திருத்தச்சட் டம் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால்,பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை பாராளுமன்றம் கூடிய போது உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்துள்ளார்.

அரசியல் யாப்புக்கு முரணான பிரிவுகள் இத்திருத்தச் சட்டமூலத்தில் இருந்து நீக்கப்பட்டால், சாதாரண பெரும்பான்மை அடிப்படையில் இத் திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமென்றார். (தி-60)

# சிறுவர் விளையாட்டு விழா இருவேறு இடங்களில்

(மருதங்கேணி)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வட-கிழக்கு மாகாண மட்டத்தில் சிறுவர் இல்லங்களுக்கிடையே நடாத்தவுள்ள விளையாட்டு விழா அடுத்தமாதம் முதலாம் திகதி இரு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்.வவுனியா மாவட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கிலும்,மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கல்லடிசிவானந்தா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (உ-35)

# அடங்கிக் கிடக்கும் சிறார்களை ஆற்றல் மிகுந்தவர்களாக்கும்

அரங்கு என்பது தளைகளை நீக்கி சுதந்திரமாக செயற்பட வைக்கும் ஓர் இடமாகும்.இவ்வாறான சுதந்திரமான விட்டுக் கொடுப்புள்ள இடத்தினை சிறுவர்களுக்கு அளிக்கும்போது அது சிறுவர் அரங்காகிறது.

## சிறுவர் அரங்கு

பாடசாலைகளில் ஆசிரியர் சொல்லிகொடுப்பதை கிளிப்பிள்ளை போல திருப்பிக் கூறிக்கொண்டிருக்கிறார்கள் இன்றைய சிறுவர்கள். இந்தச் செயற்பாடு எம்மத்தியில் இயல்பாக இடம் பெற்று வருகின்றது. சிறுவர்

**சி. சியாமா**
செயல் திறன் அரங்க இயக்கம்

களை ஏன்? எதற்கு? என்ற வினாக்கள் தொடுக்க ஆசிரியர்கள் விடுவதில்லை. இந் நிலையில் சிறுவர்களிடம அரங்கு என்ற கருவி தொழிற்படும் போது அங்கு சுதந்திரம் வழங்கபபட்டு ஆடிப்பாடி விளையாடி அவர்களை சிந்திக்கவும் தூண்டுகின்றது.


சிறுவர்களுக்கு எப்போதும் ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்பதில் ஆர்வமும் விளையாடவும் ஆடவும், பாடவும் விருப்பமாக இருக்கும். இன்றைய பாடசாலை கல்வி முறைகளில் இவ்வாறான தமது விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

இன்று யுத்த சூழ்நிலையால் பல இடர்பாடுகளிலும் குடும்பக் கஷ்டங்களின் மத்தியிலும் சிறுவர்கள பாடசாலைக்கு வருகிறார்கள். அவர்களை இந் நிலைமையில் இருந்து மீட்டு, அவர்களது கல்விச்செயற்பாட்டை ஊக்குவிக்க சிறுவர்களுக்கான ஒரு அரங்கு அதவாது,அவர்களை சுதந்திரமாகச் செயற்பட விடும ஒருஇடம் நிச்சயமானத் தேவை.

இவ்வாறான சிறுவர்களை விட்டுக் கொடுத்து சுதந்திரமாகச்செயற்பட வைத்து அவர்களுடன் ஆடிப் பாடி விளையாடும் போது அவர்களது மனம் இலகுவாகி கல்வியில் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

நாம் சிறுவர்களுடன் ''சிறுவர் நாடகம்'' செய்த போது,முதலில் எம்முடன் ஆடிப்பாட வராமல் ஆசிரியர்களுக்குப் பயந்து இருந்தவர்கள், எமது நாடகம் முடிந்ததும எம்முடன் ஆடிப்பாடி இணைந்தார்கள்.ஒவ்வொரு மிருகங்களாக நாம் பாவனை செய்து காட்டியதை தாமும் செய்து காட்டி மகிழ்ந்தார்கள்.இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களது மனதை தளர்நிலையில் இருந்து மீட்டுச் செல்கிறது.

சிறுவர் அரங்கு மூலமாகச் செயல்படும் சிறுவர்கள், புதிய படைப்பாக்கத்தை வெளிப்படுத்தும் வல்லமை மிகுநதவர்களாகவும் செயல்முனைப்புளள சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இவ்வரங்கினூடாக வெளிக்கொணரப்படுகின்றார்கள். □



சிறுவர் அரங்கில் ஓர் காட்சி

## சம்பள முரண்பாட்டை நீக்குமாறு

# கல்வி நிர்வாக உத்தியோகத்தர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

கல்வித்துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரி உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களால் தாக்கல் செய்யப் பட்டுள்ள இம்மனுவில், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள அளவுத்திட்டம் தம்மைவிட அதிகமாக இருப்பதாகவும், இதனால் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவையில் அங்கம்பெறும் அமைச்சர்கள், அரசாங்கசேவை ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (தி-60)

# மீட்புநிதியை மீளப்பெற தவறியோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதுவரை மீளப்பெறாதோர் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

21.11.2003(வெள்ளி)

ஸ்ரீசுப்பிரமணிய மகாவித்தியாலயம்- புதுக்குடியிருப்பு பி.ப. 3.00மணி- பி.ப. 3.30 மணி.

22.11.2003 (சனி)

வருவாய்ப்பகுதிச் செயலகம்- புளியங்குளம் காலை-8.00மணி- காலை 9.00 மணி.

விடத்தல்தீவு றோ.க. பாடசாலை- விடத்தல்தீவு பகல் 12.30 மணி- பகல் 12.45 மணி.

கருங்கண்டல் றோ.க. பாடசாலை-கறுக்காய்க்குளம் பி.ப. 2.00 மணி- பி.ப.2.30மணி.

மல்லாவி மத்திய கல்லூரி-மல்லாவி பி.ப. 4.30மணி- பி.ப. 5.00 மணி.

23.11.2003 (ஞாயிறு)

வேமபொடு கேணி அ.த.க.பாடசாலை- பளை காலை 8.00மணி- பகல் 11.00மணி.

கிளி. மத்திய கல்லூரி- கிளிநொச்சி பி.ப.3.00மணி பி.ப.3.30மணி என்ற ஒழுங்கில் மீட்பு நிதிக் கடனை மீளப் பெறமுடியும்.

பளை, புளியங்குளம் ஆகிய இடங்களிற்கு வருபவர்களுக்கு நுழைவாயில் அருகே ஊர்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் நிதிப் பொறுப்பாளர் யோ. தமிழேந்தி அறிவித்துள்ளார். (உ)

### திலீபனின் திருவுருவப்பட ஊர்திப் பவனி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கோட்டத்தில் இடம் பெறும் லெப்.கேணல்.தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊாதி இன்று சித்தன்கேணிச் சந்தி, சில்லாலை, பண்டத்தரிப்பு,விளான் சந்தி, தொட்டிலடிச் சந்தி, மாசியப்பிட்டிச் சந்தி, சீரணிச் சந்தி, மானிப்பாய், பிப்பிலிச் சந்தி, நவாலி, ஆனைக் கோட்டை, உயர்ப்புலம், சுதுமலை, தாவடிச் சந்தி ஆகிய பகுதிகளூடாகப் பவனி வரவுள்ளது.(உ)

# படுகொலைக்கு பயன்படுத்திய 3 துப்பாக்கிகள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதெனக் கூறப்படும் 3 துப்பாக்கிகள் கடந்த திங்கள் அன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் சரத் குணதிலக இத்துப்பாக்கிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சாட்சியமளிக்கையில்,இம் மூன்று துப்பாக்கிகளும் பூரண இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

இதன் போது இவை சீனாவில் தயாரிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாகிகள் எனத் தெரியவந்துள்ளதுடன், அவற்றுக்குரிய ரவைகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இத்துப்பாக்கிகளின் தொடர் இலக்கம் 6 இடங்களில் இருந்தன. எனினும் ஒரு துப்பாக்கியில் ஒரு தொடர் இலக்கமே இருந்ததாகவும் அவர் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கு விசாரணையின போது முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உட்பட 15 பிரதிவாதிகள் நீதி மன்றில் ஆஜராகி இருந்தனர். (தி-61)

# நீதிமன்ற அபிவிருத்திகள் நான்கு கட்டங்களாக

(கொழும்பு)

இலங்கை நீதித்துறை வலயமைப்பின் கீழ், நீதி மன்றக் கட்டடங்கள் நான்கு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக நீதிச் சேவை ஆணைக் குழுவின் தலைவர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொழும்பில் இருந்து தங்காளை வரை உள்ள நீதி மன்றக்கட்டடங்கள் முதலாவது கட்டத்திலும், கொழும்பில் இருந்து பதுளை வரையான கட்டடங்கள் 2 வது கட்டத்திலும்,கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரையான கட்டடங்கள் 3வது கட்டத்திலும்,வடக்கு-கிழக்குப் பிரதேச நீதிமன்றக் கட்டடங்கள் 4வது கட்டத்திலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(தி-60)

# யா/உஸ்மானியாக்கல்லூரி இன்று முதல் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள உஸ்மானி யாக் கல்லூரி, 13வருடங்களுக்குப் பின்னா இன்று காலை8.30 மணிக்கு வைபவரீதியாக மீள ஆரம்பமாகவுள்ளது.

கல்லூரி அதிபர் எம்.எஸ். எம். முபாறக் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சின் இணைப்பாளர் மௌலவி பி.ஏ. எஸ்.சுபியான் கலந்துகொண்டு பாடசாலைய்யை மீள ஆரம்பித்து வைப்பார்.

நிகழ்வில்,பிரதம அதிதியாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் விசேட அதிதியாக யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் என். வரதராசாவும் கௌரவ அதிதியாக யாழ்.கோட்டக் கல்விப் பணிப் பாளர் எஸ்.எஸ். தங்கராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

### ஈழவேந்தனின் விசேட உரை

(யாழ்ப்பாணம்)

''ஈழவிடுதலைப்போராட்ட வரலாறும் தியாகி திலீபனும்'' என்னும் தலைப்பிலான மா.க.ஈழவேந்தனின் விசேட உரை,இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ-4)

## விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் விற்றனராம்

# பாதுகாப்புத்துறை அதிகாரிகள் 15பேருக்கு தாய்லாந்து நீதிமன்றம் பிடியாணை

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்டவிரோதமாக ஆயுதங்கள் விற்பனை செய்து வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 15 பேரிற்கும் தாய்லாந்து நீதி மன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தாய்லாந்தைச் சேர்ந்த விமான படை அதிகாரிகள் இருவர் மற்றும் 6 பொலிஸார் தலைமை ஆணை அலுவலர் உட்பட 15 பேரிற்கே தாய்லாந்து நீதி மன்றம் இவ்வாறு பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில், விடுதலைப் புலிகளுக்கு இவ்வாண்டு முறபகுதியில் ஆயுதங்களை விற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த,தாய்லாந்து விமானப்படையின் இளநிலை அதிகாரி ஒருவரை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சார்ஜன் சுச்சாய் கொம்பொய், (வயது -31) என்ற இவ் அதிகாரி தாய்லாந்து விமானப்படையின் தரைப் பாதுகாப்புப் படையின் டொங், மொங என்ற விமானத்தளத்தில் பணியாற்றி வந்தவர் என்றும், இவர் கடந்த மே மாதம் ரனொல் மாகாணத் தலை நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றின் கார் தரிப்பிடத்தில் வைத்து மூன்று விடுதலைப்புலி உறுப்பினர் களுக்கு 13 பிஸ்டல்களை விற்ற தாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் தாய்லாந்தின் கிழக்கு கடற்கரையில் பர்மாவிற்கு அருகே றங்கொங் என்ற நகரில் 3 இலங்கையர்கள் ஆயுதக்கடத்தலில ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில கைது செய்யப்பட்டதையடுத்தே தாய்லாந்துப் பொலிஸார் சிலர் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை சட்ட விரோதமாக விற்று வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, போலித் துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் 7 பேர் மீது வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

இதை விட,சில ஆண்டுகளுக்கு முன்னர் தாய்லாந்தின் தெற்குப்பகுதியின் சுற்றுலாத்தீவான புக் கேத்தில் விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையும் தெரிந்ததே.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, தாய்லாந்து அரசு ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டு வருவதாக கூறப்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புக்கள் மீது தீவிர கவனம் செலுத்தி வருகின்றதாக அண்மையில் இலங்கை வந்திருந்த தாய்லாந்துப் பிரதமர் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-5,10,62)

# திலீபனின் உருவப்பட ஊர்தி இன்று யாழ். நல்லூர் கோட்டத்தில் ஊர்வலம்

(கொழும்புத்துறை)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டிய திலீபனின் உருவப் படம் தாங்கிய ஊர்திப்பவனி இன்று யாழ். நல்லூர்க் கோட்டப் பகுதிகளுக்கு மக்கள் அஞ்சலிக்காக ஊர்வலமாக எடுத்து வரப்படவுள்ளது.

தீவகத்திலிருந்து வரும் இவ் ஊர்தி இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையிடம் கையளிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து ஊர்திப்பவனி சத்திரத்துச் சந்தியை அடைந்து,ஆஸ்பத்திரிவீதி,பருத்தித்துறைவீதியூடாக ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, தபால்நிலைய வீதி, மின்சார நிலைய வீதி,கஸ்தூரியார் வீதி,கன்னாதிட்டி சந்திவழியாக சிவன் கோவிலடியைச் சென்றடையும்.

அங்கிருந்து வைத்தீஸ்வராக் கல்லூரி,மானிப்பாய் வீதி,காங்கேசன் துறை வீதி, பெரியகடைவீதி வழியாக வைரவர் கோவில் பகுதியை அடைந்து ,ஆஸ்பத்திரிவீதியால் முனீஸ்வரன் வீதியை அடைந்து யாழ். மத்திய கல்லூரிக்குச் செல்லும்.

பின்னர், வேம்படி மகளிர் கல்லூரி, வேம்படி வீதியூடாக திருக்குடும்ப கன்னியர் மடம்,பிரதான வீதி, சென்சாள்ஸ்,பரியோவான் கல்லூரி, பழைய பூங்காவீதி வழியாக யாழ். செயலகத்தை அடையும்.

தொடர்ந்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக நாவலர் வீதி,நல்லூர் குறுக்கு வீதி,யாழ். மாநகரசபை, முத்திரைச்சந்தி,கல்வியங் காட்டுச்சந்தி, ஆடியபாதம் வீதியூடாக திருநெல்வேலி சந்தி, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, இராமநாதன் வீதி,காங்கேசன்துறை வீதியூடாக நாவந்துறை, குருநகர் கரையோரக் கிராமங்கள் வழியாக திலீபன் நினைவு ஊர்தி செல்லும்.

அனைத்துப் பொது மக்கள் மற்றும் வர்த்தக, அரச திணைக்கள ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை அஞ்சலி நிகழ்வுகளில் பங்கு பற்றுமாறு திலீபனின் நினைவு ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுள்ளனர். (உ-51)

# மக்களுக்கு வாழ்வளித்த வன்னி

# மீண்டும் புத்துயிர் பெறுவதெப்போ?

அ.தம்பித்துரை


இளவேனில், முதுவேனில்,முன்பனி, பின்பனி , கார், கூதிர் எனப் பருவ காலங்களை ஆறு வகையாகப் பிரித்த மூதறிவாளர்களான முந்தையோர், நிலங்களையும் ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். அவற்றுள் காடும் காடுசார்ந்ததுமான நிலத்தை முல்லை என்றும், வயலும், வயல் சார்ந்ததுமான நிலத்தை மருதம் என்றும் அழைக்கலாயினர்.

எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த எம் தாயகத்தில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின், சீர்கெட்டுச் சிதைவுபட்டுப் போன, அவ்லங்களோடு கூடிய அலங்கோலமான வாழ்க்கை முறைகளை எண்ணிப் பார்த்தால், கண்ணீரிற்குப் பதிலாக உதிரமே வழிந்தோடும்! இன்றைய நிலையில் மருத நில வாசிகளான வன்னிப் பெருநிலப் பரப்பில் அன்று வாழ்ந்த உழவரின் வளமான, வனப்பான வாழ்க்கை முறைகளை ஒருமுறை திரும்பிப் பார்ப்பதே அவர்கள் எமக்குச் செய்த நன்றியை மறவாமல் நினைவு கூருவதாக அமையும். மருத நிலத்தையும், அங்கு வாழ்ந்த மக்களையும் வாழ்த்துவதற்கு, நா ஒன்று போதாது! எழுதுவதற்கு நாள் ஒன்று காணாது! மற்றெல்லா நிலங்களிலும் வாழும் மக்களுக்கு மாத்திரமல்ல, விலங்குகள், பறவைகளுக்கும், வள்ளல் போல வரையாது வாரி வாழங்கி வருபவர்கள் மருதநில மக்களே. அதனாலன்றோ ''உழவன் சேற்றில் கைவைக்காவிடின் நாம் சோற்றில் கைவைக்கமுடியாது'' என்று ஒரு முதுமொழியை ஆன்றோர் கூறி வைத்தனர்.

உடலிலுள்ள உறுப்புக்கள் அனைத்திற்கும் உதிரத்தைப் பரப்பி அவற்றை வளர்த்து வலுவாக்கி அவை சீராக இயங்க உதவும். இதயம் போல விளங்குபவனே உழவன் என்ற உன்னத நடமாடும் மனித இயந்திரம். முதிரை, வீரை, பாலை, கருங்காலி என்னும் வகை தெரியாத பல்லினப் பெருமரங்களால் செறிந்து வளர்ந்த அடர்ந்த காடுகளை அழித்து களனிகள் அடங்கிய மருதநிலத்தை மணப்பெண்ணாக மாற்றுவதற்கு எத்தனை வருடங்களையும் எவ்வளவு பணத்தையும் செலவிடுகின்றான்? அவன் சிந்துகின்ற வியர்வையும், இழக்கின்ற சக்தியும் எவ்வளவு? இக்காடுகளை அழிக்குமபோது அவன் சந்திக்கின்ற பயங்கரச் சம்பவங்கள் எண்ணில் அடங்காதன! மலை போல் வளர்ந்திருக்கும் கறையான் புற்றுக்களும், அவற்றைக் கொத்தி அழிக்கும் போது படையெடுத்துப் படமெடுக்கும் பாம்புக் கூட்டங்களும்தான் எத்தனை? எத்தனை? அவற்றையெல்லாம் தாண்டித்தான் வெட்டி அழித்த காட்டைத் திருத்தியமைக்க அதிகாலை கோழிகூவும் முன் எழுந்து ஏரோடும் சோடிக் காளைகளோடும் வயலுக்குள் இறங்கினவன் கோட்டான் கூவும் வரை பன்முறை உழுது நிலத்தைப் பண்படுத்துகிறான். நெற்றியின் வியர்வை நிலத்தில் வடியக் கடும் வெயிலையும் நிலவாகக் கருதி வாய்க்கால் வெட்டியும், வரம்புகள் கட்டியும் பாடுபடும் தாய் தந்தையரோடு பிள்ளைகளும் சேர்ந்து தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வர்.

''போர்வீரன் போர்முனையில் சிந்தும் இரத்தத்திலும் மேலானது!

உழவன் ஏர்முனையிலே சிந்தும் வியர்வை!''என்று அறிஞர்கள் கூறுவதில் வியப்பேதும் இல்லை. அந்தப் போர் வீரனுக்கு உணவு அழிப்பவனும் உழவன் தான் என்பதை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. பலமுறை உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தில் நாள், கோள் பார்த்து அயலில் உள்ள தெய்வங்களுக்குத் தேங்காய் உடைத்து நேர்ந்துகொண்டு நெல்லை விதைக்கிறான். வானம் பொய்யாது பொழிந்து கொடுக்கப் பயிர் செழிப்பாக வளர்ந்து கதிராகி முற்றி விளைந்த நேரம் நல்லநாளில் புதிர் எடுத்து அவற்றை மணியாக்கிச் சூரியனுக்கும் கோயில்களுக்கும் பொங்கிப் படைத்துத் தாமும் உண்டு அயலவர்களுக்கும் வழங்கி மகிழ்கின்றான்.



நீர்வளம் மட்டும் நிலையாகக் கிடைத்துவிட்டால் அவனது வாழ்வின் வழமும் உயர்ந்துவிடும். குளங்கள் குட்டைகளில் நீர் நிரம்பிவிட்டால், அவன் உள்ளமும் மகிழ்ச்சியால் நிரம்பி வழியும். காலபோகம சிறுபோகம் என இரு போகப் பயிர்ச்செய்கையால் அவனது வாழ்வும், வளமும் செழிப்படையும்.

மழைவெள்ளத்தால் நீரைத் தேக்கித் தாங்கி நிற்கும் குளங்கள் குட்டைகள், நீரோடைகள்; அங்கே துள்ளிக் குதிக்கும் மீன் வகைகள் அவற்றைத் தூண்டில்போட்டுப் பிடிக்கும் சிறுவர்கள்; மீன்களைக் கொத்திச்செல்ல உறங்குவதுபோல நடித்து ஒற்றைக்காலில் தவமிருக்கும் வெள்ளைநிறக் கொக்குகள் ; நீண்ட குலைகளைத் தாங்கமாட்டாமல் வளைந்துநிற்கும் வாழைமரங்கள், இளநீர்க் குலைகளைத் தாங்கி நிற்கும் தென்னை மரங்கள் தம்மை வளர்த்து விட்ட பூமித்தாய்க்கு முத்தம் கொடுப்பது போலத் தலை சாயத்து நிற்கும் நெற்கதிர்கள், நெற்கதிர்களைக் கொய்து செல்லும் கொச்சைமொழி பேசும் பச்சைக் கிளிகள்; பல்லின ஒலிகளில் மெல்லிசை எழுப்பும் பறவையினங்கள், சோலைகளில் மறைந்திருந்து கூவிக் கழிக்கும் கோகிலங்கள், அறுவடை முடிந்த வயல்களிலும் வரம்புகளிலும் மேய்வதற்குத் தம் கன்றுகளோடு துள்ளிக் குதித்துத் தாவிவரும் பசுக் கூட்டங்கள் என்பன மருதம் மனிதருக்கு அளிக்கும் மகிழ்ச்சி தரும் மகத்தான விருந்துகளில் சிலவாகும்.

எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு பலவகை இன்னல்கள் மத்தியில் நெல்லை விதைத்துப் பயிராக்கிய பின்பு மழையையே நம்பியிருக்கும் அந்த ஏழை உழவனின் எண்ணத்தில் இடிவிழுந்தது போல மழையும் பொய்த்துவிட எத்தனை தடவைகள் வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விடுகின்றான்? ஏழைகளுக்கு இறைவனோடு இயற்கையும் எதிராக இருந்து அவர்களின் வற்றிய வாழ்க்கையை மேலும் வரண்டதாக மாற்றிவிடுகின்றது!!

வானம் வரையாது பொழிந்து விளைச்சல், செழிப்பாக உள்ள காலங்களில் நெல்லை மூடை மூடையாகக் கட்டி மாட்டு வண்டிகளிலும், ஏனைய வாகனங்களிலும் ஏற்றிச் சென்று அரசினர் பண்டகசாலைகளிலும் தனியார் வியாபார நிலையங்களிலும் விற்று, மடிநிறைந்த பணத்துடனும், மனம்நிறைந்த கழிப்புடனும் மனைவி, பிள்ளைகளுக்கும் தமக்கும் தேவையான உடைகளையும், சிற்றுண்டி வகைகளையும் (சில நகைகளையும்) வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்புவார்கள்.

விருந்தினரை வரவேற்று உளநிறைவோடும், முக மலர்ச்சியோடும் பல்சுவை உணவளித்து உபசரித்து விருந்தோம்பும் உயரிய பண்பு வன்னி வாழ் மக்களோடு உடன் பிறந்த தொன்றாகும். இல்லையென்று சென்றோருக்கு இல்லையென்று கூறாது அள்ளிக்கொடுத்துத் தாமும் உண்டு தானம் வழங்குவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கண்ட வன்னி வாழ் மக்களின் இன்றைய வளம் கெட்ட வரண்ட வாழ்வையும் அவல நிலைகளையும் நோக்குவோம் ஆனால், போரின் அனர்த்தங்களால் ஏற்பட்ட அவலங்களைக் காணலாம். புலம்பெயர்ந்து அமைதி தேடி வேறு இடங்களுக்குச் சென்றவர்கள் தங்கத் தரிக்க வதிவிடமின்றிக் காலையில் ஓரிடமும் மாலையில் வேறிடமுமாக உண்ண உணவின்றி உடுக்க மாற்றுடையின்றி படுத்துறங்கப் பாயின்றி வானமே கூரையாகக் கொட்டும் மழையிலும், கொதிக்கும் வெயிலிலும் அனுபவிக்கும் துன்ப துயரங்கள்தான் எத்தனை?

கோழிகளுக்குக் கொழித்துக் கொட்டும் குருணல் அரிசிக்கும், மாடு, ஆடுகளுக்கு வடித்து ஊற்றிய கஞ்சிக்கும் வழியின்றி மூன்று வேளையும் அரைவயிறும், கால் வயிறுமாகக் காய்ந்த ரொட்டித் துண்டோடு காலத்தைக் கழிக்கும் வன்னி மக்களின் சோகக் கதையை யாருக்குச் சொல்வது? பசி,. பசி என்று தாயின் முகத்தைப் பார்த்து அழும் குழந்தைகளும் பிள்ளைகளின் துயரத்தைத் தாங்கமாட்டாமல் கணவனின் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் விடும் தாயும், தாய் பிள்ளைகளின் துயரப் பொதியைச் சுமக்க முடியாமல் வானத்தை அண்ணார்ந்து பார்த்து இறைவனுக்கு முறையிடும் தந்தையுமாகக் காலமெல்லாம் கலங்கிய வணணம் தங்கள் வாழ்க்கையை நத்தை வேகத்தில் நகர்த்திச் செல்லும் வன்னி மக்களின் துயரம் தோய்ந்த கதைகள் ஒன்றா? இரண்டா? எடுத்துச்சொல்வதற்கு?

ஏராளமான நெல்விளைந்த பல்லாயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் வேலிகளோ, எல்லைகளோ, வரம்பு வாய்க்கால்களோ இன்றிப் பற்றைகளும் புதர்களும் நிறைந்த பரட்டைக் காடுகளாகக் காட்சி அளிக்கின்றன. வீடு வாசல்கள் இருந்த இடம் தெரியாமலும், தென்னை, கமுகு, மா, பலா போன்ற வான் பயிர்கள் யாவும் பட்டும், கெட்டும் அநேக மக்களின் தாகத்தைத் தீர்த்த நன்நீர்க் கிணறுகள் மனித எலும்புக் கூடுகளாலும், மாமிசத்திற்காகக் கொல்லப்பட்ட ஆடு, மாடு, எருமை போன்ற மிருகங்களின் எச்சங்களாலும் நிரப்பப்பட்டும் காணப்படுகின்றன.

வயல்களில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் பல்வேறு நாடுகள் பங்கெடுத்துக் கொண்டாலும், மருதநில மக்கள் அச்சமின்றி விவசாயத்தில் ஈடுபட்டு முன்னேற மேலும் சில வருடங்கள் ஆகலாம் என்றே நம்பப்படுகின்றது. மருதநில மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி அவர்களுக்குப் புத்துயிர் அளிக்க அரசும் மற்றைய செல்வந்த நாடுகளும் விழிப்புணர்ச்சியோடு ஆர்வமும், அக்கறையும் கொண்டு ஆவன செய்யுமானால், அது வரவேற்கத்தக்கதாகும். □

---

### சுகாதார சேவையிலிருந்து

## ஓய்வுபெற்ற தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஓய்வுபெற்ற சுகாதார சேவை தொழில்நுட்ப ஊழியர்கள் மீண்டும் சுகாதார அமைச்சினால் பணிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து நடைபெற்றுவரும் வேலைநிறுத்தத்தால் வைத்தியசாலைகளில் தொழில் நுட்பப்பணிகள் பாதிக்கப்படாதிருக்கும் வகையிலேயே இந்நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இப்போது வழங்கப்படும் ஓய்வூதியத்திற்கு மேலதிகமாக சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது வழங்கப்பட்ட இறுதிமாதச் சம்பளமும் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற சுகாதார ஊழியர்கள் பலர் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையாற்றி வருகின்றனரென்றும் அவர்களிலும் கணிசமான அளவினர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டிருந்தனர் என்றும் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு, அத்தகையவர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பாவிட்டால் அவர்களும் ஒப்பந்தப் பணிகளிலிருந்து நீக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளது. (பி-6)

---

## கண்சத்திர சிகிச்சை

(வவுனியா)

வவுனியா பொது வைத்திய சாலையில் கடந்த இரு நாட்களில் சுமார் 100 பேருக்குக் கண் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

மனித உரிமைகளுக்கான மன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தக் கண் சத்திரசிகிச்சைகளை, லண்டனில் இருந்து வந்த 12 தமிழ் வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினர் நடத்தினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வந்த 55 பேருக்கும் சத்திர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. (தி-60)

---


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடாத்தும்

## சமய அறிவுப் போட்டி - 2003

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சையைப் பின்வரும் 10 நிலையங்களில் நடாத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

01. யா/வட இந்து மகளிர் கல்லூரி
02. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
03. யா/விக்கினேஸ்வராக் கல்லூபி
04. யா/அத்தியார் இந்துக் கல்லூரி
05. யா/இராமநாதன் கல்லூரி
06. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
07. யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்
08. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
09. யா/இந்து மகளிர் கல்லூரி
10. யா/நயினாதீவு மகாவித்தியாலயம்

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும் தவறாது பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை 14.11.2003 ஆம் திகதிவரை பாடசாலை அதிபர்களிடமிருந்தும் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களிலிருந்தும் ரூபா. 10/-ஐ செலுத்தப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரீட்சைத் திகதி - 16.11.2003 முற்பகல் 9.30 மணி**

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி-6709)

## இன்று ஒரு தகவல்

# சீரகம்

பழைய பாடல் ஒன்று இருக்கின்றது தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள்! ''வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?இங்கு ஆர் சோர்ந்திருப்பார். இச் சரத்தில் மங்காத சீரகத்தை தந்தீரே வேண்டேன் பெருங்காயம் ஏரகத்துப் பெருமானே'' இதில் வெங்காயம், சுக்கு சீரகம் என்றெல்லாம் கூறப்படுகின்றதல்லவா?

இதனை நாம் ஆன்மீகநோக்கிலும் பார்க்கலாம். சங்கீதமாகவும் பார்க்கலாம். இதனை ஆன்மீகக் கருத்திலே முதலில் நோக்குவோம்.

வெங்காயம் என்பது வெம்மை + காயம் எனப்பிரிக்க வேண்டும். வெம்மை என்பது உஷ்ணம். காயம் என்பது உடல். அதாவது உஷ்ணமான உடல் சுக்கானால் அந்த உடல் இறந்து போய் விட்டால் வெந்தயத்தால் ஆவதென்ன? இதனை வெந்த + அயம் என்று பிரிக்கவேண்டும். தங்க பஸ்பம், பவளபஸ்பம் என்று கூறுவோம் அல்லவா, இவற்றினால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை.

மங்காத சீர் + அகம்=சீரகம் என்பதை சீர் +அகம் என்று பிரிக்கவேண்டும். மோரில் உளற்றிக்கொடுக்க வேண்டும். அப்படிக்கொடுத்தால் எனக்கு நல்லது. வேண்டேன் பெருங்காயம்! பொருங்காயம் என்றால் பெரிய உடம்பு. இது எனக்கு வேண்டாம் என்று ஒருவர் முருகப்பெருமானை நோக்கிப் பாடும் பாடல் இது.

இப்பாடலில் உள்ள லௌகீக உண்மை என்னவென்றால் சீரகம் என்று கூறுகின்றார் அல்லவா? அது சமையலில் நாம் பயன்படுத்தும் பொருள்!சீரகம் எனும் பெயரிலேயே சிறப்பு மிகுந்துள்ளது. அதாவது நமது அக உறுப்புக்களைச் சீராக வைத்துக்கொள்ளும் ஆற்றல் இதற்கு உண்டு. இதனால் தான் அதனைச் சீரகம் என்று கூறுகின்றோம். சீரகத்தில் என்னவெல்லாம் உள்ளன என்று தெரிந்து வைத்துக் கொண்டோமானால் இன்னும் நமக்கு சீரகத்தின் மீது மரியாதை கூடும்.

சீரகத்தில் புரதம் இருக்கின்றது. இலைச்சத்து இருக்கின்றது. நார்ச் சத்து உள்ளது. காபோஹைதரேட் இருக்கின்றது. தாதுஉப்புக்கள், சுண்ணாம்பு, இரும்பு, பொசுபரசு, சோடியம், பொட்டாசியம் போன்று பல தாதுக்களும் விற்றமின் $B^1$, $B^2$ போன்றனவும் இதில் அடங்குகின்றதாம்!

இப்படியான பெருமைகளைப் பெற்றது இந்த சீரகம். சீருகத்தை வாளி முறையில் வடித்து அதிலிருந்து எண்ணெய்யும் எடுக்கின்றனராம். அந்த எண்ணெய் மருத்துவத்திற்கும் பயன்படுகின்றதாம்.

சீரகம் நமது ஜீரணத்தை கூட்டும். சில உணவு விடுதிகளில் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து பார்த்தால் சீரகம் இருக்கும். அதனை எடுத்து வாயில் போட்டு விட்டு வருவார்கள் பலர். ஏனென்று காரணம் தெரியாமலே அதனை வாயில் போட்டு மெல்பவர்கள் பலர் உள்ளனர். சீரகம் ஜீரணசக்திக்கு நல்லது. பசியைத் தூண்டக்கூடியது. விஷத்தை முறிக்கும் தன்மையும் சீரகத்திற்கு உண்டு. குளிர்ச்சியை உண்டாக்கும். இனிமையான குரல் வளம் பெறுவற்கும் சீரகம் உதவுமாம். அதனால் இடையிடையே சீரகத்தை மெல்வது நல்லது தான்.

வாய்ப் புண்ணைப் போக்கக்கூடிய ஆற்றலும் சீரகத்திற்கு உண்டு. இருமலைக் கட்டுப்படுத்தும். பித்தத்தைப் போக்கக் கூடிய தன்மையும் உண்டு. அதனால் தான் சித்த ஆயுள்வேத மருத்துவ மனையில் சீரகத்தைப் பல்வேறு முறைகளில் பயன்படுத்துகின்றனர்.

சீரகப் பொடி சிறிதளவு எடுத்துத் தேன், உப்பு, நெய் மூன்றையும் கலந்து தேள் கொட்டிய இடத்தில் தடவினால் தேள்க்கடி விஷம் இறங்கிவிடுமாம். அதேபோல் சீரகப்பொடியை பாலில் கலந்து உச்சந் தலையில் தேய்த்தால் செம்பட்டை மயிர் கருமை நிறமாக மாறுமாம்.

வயிற்றுவலி வந்து விட்டால் உடனடி மருத்துவம். சிறிது சீரகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். உப்பையும் மிளகையும் நன்றாக அரைத்து அதனை சீரகத்துடன் சேர்த்துச் சாப்பிட்டுத் தண்ணீரைக்குடித்தால் வயிற்று வலி நின்று விடும். அதேபோல் சீரகத்தை வறுத்து தூளாக்கி சுடுநீர் சேர்த்துப் பசும்பாலில் சேர்த்துக்குடித்தால் நல்ல பசி ஏற்படும். இது குடி போதையினால் ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்துமாம். இப்படி சீரகத்தின் நன்மை நீண்டு கொண்டே செல்கிறது.

குடிபோதையினால் வரும் பாதிப்பைச் சீரகம் கட்டுப்படுத்துகின்றது என்பதை விட, குடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுவது எவ்வளவோ மேல் அல்லவா?

ஒருவர் குடித்துவிட்டு கார் செலுத்தினார் என்ற குற்றத்திற்காக அவரைப்பிடித்து நீதி மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விட்டார்கள். நீதிபதி கூறினார் ''நீ குடித்து விட்டுக் கார் ஓட்டிய குற்றத்திற்காக 1000 ரூபா அபராதம் செலுத்த வேண்டும். அத்துடன் உனது காரின் அனுமதிப்பத்திரமும் பறிமுதல் செய்யப்படும்'' என்றார். அப்போது அந்தக் குற்ற வாளி கூறினாராம் ''ஐயா! நீங்கள் முதலில் சொன்னதைச் செய்யலாம். 1000ரூபா கட்டி விடுகிறேன். ஆனால் அடுத்ததாகக் கூறினீர்களே அனுமதிப்பத்திரத்தைப் பறி முதல் செய்வதாக! அதனைச் செய்ய முடியாது என்றார். நீதிபதி ''ஏன்?'' என்று கேட்டாராம். இவர் சொன்னாராம் ''எனது காருக்கு அனுமதிப்பத்திரமே இல்லை''

இளசை எஸ்.சுந்தரம்

# நாடுகளுடன் நட்புறவை வளர்ப்பதில் புலிகளையே அரசு பின்பற்றுகிறது

## பேணாட் குணதிலக தெரிவிப்பு

(கொழும்பு)

அயர்லாந்தில் இலங்கைத் தூதரகம் ஒன்றை அமைப்பதற்கான தீவிர முயற்சியில் அரசு இறங்கியுள்ளதாக நியூயோர்க்கில் தங்கியிருக்கும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர்மேலும் கருத்துக்கூறுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் விரைவில் அயர்லாந்து நாட்டுக்குச் சென்று பாரிஸில் சட்டவல்லுநர்களுடன் கூடித் தயாரித்த இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபை மீண்டும் சட்ட வல்லுநர்களுடன்கூடி ஆராயவுள்ளனர்.

இந்நிலையில் அயலாந்தில் இலங்கைத் தூதுவராலயம் ஒன்று இல்லாமல் இருப்பதை உணர்ந்த அரசு அங்கு உடனடியாக தூதரகம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன், ஐரோப்பிய யூனியனின் அடுத்த தலைமைப் பொறுப்பினை அயர்லாந்து நாடு ஏற்கவுள்ளதை அறிந்து கொண்டே, தமிழீழ விடுதலைப்புலிகள் அந்த நாட்டுடன் நல்லுறவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இது விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச நாடுகளுடனான சிறந்த தொடர்பாடலை எடுதத்துக்காட்டுகிறது. அவர்களைப் பின் பற்றியே நாங்களும் அந்நாட்டுடன் நட்புறவை வளர்க்க முயன்று வருகிறோம்.

குறிப்பாகச் சொன்னால், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இன்று உலக நாடுகளின் ஆதரவினைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்விடயத்தில் இரு தரப்பினருமே வெற்றிகளைக் கண்டு வருகின்றனர். இதன் மூலம் நாட்டில் விரைவில் நிரந்தர சமாதானம் ஏற்படக் கூடிய வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் மூலமாக இலங்கை உலக நாடுகள் பலவற்றின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் ஆதரவினைப் பெறுவதும் மிகவும் முக்கியமான விடயமாகும்.

பொருளாதார மறு சீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஐரோப்பிய யூனியனுடன் தொடர்ச்சியாக நடத்திய பேச்சுக்களின் பலனாக ஐரோப்பியக் கமிஷன் திணைகளத்தில் இலங்கை தொடர்பான விடயங்களை ஆராய ஓர் உயர் மட்டக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது என்று மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

# தென்மராட்சி தெற்கில் காலபோக பயிர்ச்செய்கை சாத்தியமில்லை

## காத்திருந்த கமக்காரர் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைக்குப் படைத்தரப்பு கொள்கை அளவில் இணங்கியிருந்போதும் இது விடயத்தில் அவர்கள் காட்டி வரும் அசமந்தப்போக்கினால் இவ்வருடம் அங்கு கால போக செய்கை சாத்தியப்படாது என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் இது விடயமாகப் பிரஸ்தாபிக்கப் பட்டது.

இதேவேளை, இவ் வருடமாவது தமது நிலத்தில் சுதந்திரமாகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளலாம் எனக் காத்திருந்த சம்பந்தப்பட்ட விவசாயிகள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர்.

அத்துடன், இப் பிரதேசத்தில் செய்கை பண்ணுவதற்கேற்ற முன்னோடி நடவடிக்கைகளுக்காக இவர்கள் பெருமளவு பணத்தைச் செலவு செய்திருப்பதால் பொருளாதார ரீதியிலும் பாதிப்பை எதிர் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தென்மராட்சியின் தெற்குப் பிரதேசத்தில் உள்ள மேற்படி ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பின் உரிமையாளர்களும் அங்கு பயிர்ச்செய்கைக்குச் செல்வதாயின் அவர்கள் விசேட அடையாள அட்டை ஒன்றை பெற்றிருநதல் வேண்டும் என்ற தென்மராட்சி படையதிகாரியின் உத்தரவிற்கமைய சுமார் 300 விவசாயிகள் அந்த அடையாள அட்டையும் பெற்றிருந்தமை தெரிந்ததே

இது தவிர இப்பகுதிக் கமநல நிலையங்களும் இவ் விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்கென விதை நெல் மற்றும் விவசாய உப கரணங்களைப் பெரும் பணச் செலவில கொள்வனவு செய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-16)

## இராசி பலன்

**25.09. 2003**

**(புரட்டாதி,08,வியாழன்)**

**சதுர்த்தசி - மு.ப. 11.09வரை**

**பூரம் - பி.ப. 1.18 வரை**

**இராகுகாலம் - 1.32-3.02**

**சுபநேரம் - 7.32-9.02**

**அமாவாசை விரதம், மாளயபட்ச முடிவு**

**மேடம்**
மனத்தாங்கல், பணத்தட்டுப்பாடு, அதிகாரிகள் உதவுவர், தொழில் விருத்தி.

**இடபம்**
தன நாசம், வீண்பயம், காரிய தாமதம், பெரியோர் சந்திப்பு.

**மிதுனம்**
நற்கீர்த்தி, நல்ல சம்பாசணை, காரியசித்தி, பிறர் உதவி.

**கடகம்**
கௌரவக்குறைவு, குடும்பக்கவலை, அதிக முயற்சி, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
சயன சுகம், நண்பர்கள் உதவி, எடுத்த கருமங்கள் நிறைவேறும, கீர்த்தி.

**கன்னி**
மனக்கிலேசம், தொழில் கஷ்டம், முயற்சி தாமதம், ரோக நிலை.

**துலாம்**
ஆனந்தம், எடுத்த கருமங்கள் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, மனமகிழ்ச்சி.

**விருச்சிகம்**
இஷ்ட சித்தி, பிரபுத்தனம், ஆரோக்கியம், நன்கொடை.

**தனுசு**
தேசாந்திர வாசம், பொருள் சேதம், ரோகபயம், காரிய தாமதம்.

**மகரம்**
மனக்கவலை, சரீர பீடை, பிரயாணக் கஷ்டம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரியசாதனை,பொருள் சேர்க்கை, ஸ்திரிசௌக்கியம், கீர்த்தி.

**மீனம்**
சுவாரஸ்யம், முயற்சி பலிதம்,தொழில் முன்னேற்றம், ஆரோக்கியம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன.

## கட்டார் முதலீட்டுக்குழு இலங்கை வரும

(கொழும்பு)

முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காக கட்டாரில் இருந்து வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அந்நாட்டு மன்னர் செக்அஹமட்பீம்கலீவ் அல்தானி சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் அமெரிக்கா செல்லும் வழியில் இச்சந்திப்பு நடைபெற்றது.. (தி-60)

# மனித உரிமைகள் ஆணைக்குழு கையேடு தயாரிப்பு

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கைத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கையேடு ஒன்றைத் தயாரித்துள்ளது.

இக்கையேடு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவுக்கு ஆணைக்குழு விடுத்துள்ள வேண்டுகோளில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் மக்களின் பார்வைக்கு இக்கையேடு வைக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களாக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகள் மீது பொலிஸார் மேற்கொண்டுவரும் தாக்குதல சம்பவங்களையடுத்தே, மனித உரிமைகள் ஆணைக்குழு இந்நடவடிக்கையினை எடுத்துள்ளது. (தி-60)

# கல்வி அமைச்சு மனித உரிமைகளை மீறியுள்ளது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தங்காளை விழிப்புலன் அற்றோர் பாடசாலைக்கு பிறைவ் முறையிலான பாடப் புத்தகங்களை வழங்கத் தவறியமையினால கல்வியமைச்சு மனித உரிமைகளை மீறியுள்ளது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இப்பாடசாலை மாணவர்களினால் தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ரயல் அட்பார் குழுவினர் இந்தத் தீர்பை வழங்கியுள்ளனர்.

இம்மனுவில் இவ்வாண்டிற்கான தங்களது பாடப்புத்தகங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்பதுடன், கல்வியமைச்சரும், அமைச்சின் உயா அதிகாரிகளும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். (தி-60)

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கியல்பு
– குறள்

**வலம்புரி**

## அமைச்சர் மகேஸ்வரனின் துணிச்சல் மிகு உரை

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் பற்றி இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை சகலரையும் விழிப்படையச் செய்துள்ளது.

அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் அமைச்சர் மகேஸ்வரன் குடாநாட்டுத் தளபதி சரத் பொன்சேகாவின் கடுமையான போக்குக் குறித்து காரசாரமான விவாதத்தைப் பாராளுமன்றத்தில் நடத்தியுள்ளார். உயர் பாதுகாப்பு வலயம் என்றபேரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளை இராணுவம் ஆக்கிரமிப்பதற்கு அடிப்படைக் காரணம் யாழ்.குடாநாட்டுத் தளபதி சரத் பொன்சேகா என்பதை அமைச்சர் மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் துணிந்து கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றித், தமிழர்களுக்கெதிரான கடும்போக்கை சரத் பொன்சேகா கைவிடத் தவறுவாராயின் அவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு குடாநாட்டு மக்கள் தயாராக இருக்கின்றனர் என்ற கருத்தையும் பாராளுமன்றத்தில் அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருப்பதை இவ்விடத்தில் பாராட்டுவது சாலப் பொருத்துடையதாகும்.

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களே மௌனம் சாதிக்கும்போது பாராளுமன்றத்தில் அரச தரப்பு உறுப்பினராக அங்கம் பெறும் அமைச்சர் மகேஸ்வரனின் துணிந்த உரையை இலங்கையிலுள்ள சர்வதேசத் தூதுவராலயங்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி ஆராயும் கூட்டம் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இம் மாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் சில குறிப்பிட்ட பகுதிகளிலாவது, மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான அனுமதியை இராணுவம் வழங்கும் என்ற எதிர்பார்ப்பு அமைச்சர் மகேஸ்வரனிடம் இருந்தது.

ஆனால், குடாநாட்டுத் தளபதியின் பரிந்துரையின் பிரகாரம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அனுமதி முற்றாக மறுக்கப்பட்டது. இதனால ஆத்திரங் கொண்ட அமைச்சர் மகேஸ்வரன் காரசாரமாகப் பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். இவ்வுரை தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளின் உண்மை நிலையை சிங்கள மக்கள் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிவதாக அமையும்.

உயர் பாதுகாப்பு வலயம் பற்றி உரையாற்றியது போன்று தமிழ் மக்கள் எதிர் நோக்குகின்ற ஏனைய பிரச்சினைகள் குறித்தும் அமைச்சர் மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் துணிந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

## வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவை ஊழியர்களால கடந்த வாரம் முதல் மேற்கொள்ளப்பட்டு வரும், சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. (உ)

# யாழ்.பல்கலைக்கழகத்திற்கு இவ்வருடம் 1500பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளிவந்த கல்விப் பொதுத் தராதர(உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2003/2004 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி வழங்குவதற்குரிய விண்ணப்பப் படிவங்களைத் தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இவ்வருடம் 14ஆயிரத்து 260 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆயிரத்து 500 பேர், கொழும்புப் பல்கலைக்கழகம் ஆயிரத்து 815பேர், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆயிரத்து 845பேர், ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக்கழகம் ஆயிரத்து 725பேர், களனிப் பல்கலைக்கழகம் ஆயிரத்து 530 பேர் என்ற ரீதியில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், றுகுணு பல்கலைக்கழகம் ஆயிரத்து 370பேர், மொறட்டுவ பல்கலைக்கழகம் 820பேர், கிழக்குப பல்கலைக்கழகம் 900பேர், வயம்ப பல்கலைக்கழகம் 290பேர், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் 480பேர், இராஜரட்டைப் பல்கலைக்கழம் 535போ, சப்பிரகமுவ பல்கலைக்கழகம் 565பேர், உள்நாட்டு மருத்துவ நிறுவகம் 155பேர், கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் 80பேர், விசே(கலை) பாடங்களுக்கு 650பேர் என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் இம்முறை மருத்துவ பீடத்திற்கு 905 பேரும், பல்லறுவைப் பீடத்திற்கு 75பேரும், விலங்கு விஞ்ஞான பீடத்திற்கு 75 பேரும், விவசாய விஞ்ஞான பீடத்திற்கு 740பேரும், பொறியியல் பீடத்திற்கு 870பேரும், முகாமைத்துவ பீடத்திற்கு ?ஆயிரத்து 200 பேரும், கலைப் பீடததிற்கு 4ஆயிரத்து 160பேரும் அனுமதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதிக்குரிய விண்ணப்பப் படிவங்களை எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-18)

### சைவசமய விவகாரக்குழு ஏற்பாட்டில்

## மாணவர்களிடையில் சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு, வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தும் சமய அறிவுப்போட்டி எதிர் வரும் நவம்பர்மாதம் 16ஆம் திகதி மு.ப.9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யா/வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி, அத்தியார் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வேலணை சைவப்பிரகாச விததியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யா/இந்துமகளிர்கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம் ஆகிய 10 நிலையங்களில் இப் பரீட்சை இடம் பெறவுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதியாகும். (உ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஆசிரியர்தின விழா ஏற்பாடு தொடர்பான ஆராய்வுக் கூட்டமொன்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை பி.ப.4.00 மணிக்கு யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயதில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கோட்ட வலய மட்டச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலாளர் த.குமாரசாமி கேட்டுள்ளார். (உ-18)

### திருமலையில் புலிகளின் முகாம்கள்

## அபி.திட்டங்களைச் சீர்குலைக்கும் கட்டுக்கதை–சுற்றுலாத் துறைஅமைச்சர்

(கொழும்பு)

திருகோணமலைப் பகுதியில் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான வகையில் விடுதலைப்புலிகள் முகாம் அமைத்து வருவதாகக் கூறப்படும் செய்தியில் உண்மையில்லை என்றும்,

அரசாங்கத்தினால் மேற்கொளளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் சீர்குலைக்கும்வகையில் எதிர்க்கட்சியினரும் ஜனாதிபதியும் இணைந்து வேண்டுமென்று பரப்பியுள்ள கட்டுக்கதை இது என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

உல்லாசப் பயணத்துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் தயாரித்துள்ள புதிய சுற்றுலாத் துறைக் கொள்கையை அறிமுகப்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடு அரச ஊடகப்பேச்சாளர் அலுவலகத்தில் கடந்த திங்களன்று நடைபெறற போது மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

கடந்த இரு தினங்கள் திருகோணமலைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன் அப்போது அப்பகுதியின் முக்கிய பௌத்த விகாரையின் தேரருடன் இணைந்து மேற்படி புலிகளின் முகாம்கள் இருககும் பகுதிக்குச் சென்று பார்வையிடடேன்.

ஆனால், ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சியினர் கூறிவருவது போல அங்கு எந்தவித முகாம்களையும் புலிகள் அமைத்திருக்கவில்லை.

அங்கு அனைவரும் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எந்தவித அச்சுறுத்தல் நிலையும் இருக்கவில்லை. இதனை என்னுடன் வந்த பௌத்த தேரரிற்கும் எடுத்துக் கூறினேன்.

அதற்கு அவர் 'இவ்வாறான வீண் வதந்திகளால் இப் பகுதிக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எணணிக்கை குறைந்து வருகின்றது எனக் கவலை தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சியினரது இத்தகைய விசமப் பிரசாரங்களால் நாட்டின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்ததாக அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார். (உ-10)

### 9வது உலக சைவ மாநாட்டில் பங்கேற்க

## நல்லை ஆதீன முதல்வர் இன்று மலேசியா பயணம்

(கொழும்பு)

மலேசியாவில் நாளை தொடக்கம் 3தினங்கள் நடைபெறவுள்ள 9வது உலக சைவ மாநாட்டில் இந்து சமய வ்விகார அலுவலகள் அமைச



சரும், யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பின்ருமான தியாகராஜா மகேஸ வரன் கொளரவ அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

உலகின் தனிப்பெரும் சமயங்களுள் ஒன்றான சைவ சமயத்தின் மேம்பாட்டை உணர்த்தும் நோக்கில் 'எதிர்கால தலைமுறைக்கு சைவம்' என்ற கருப்பொருளில் நடாத்தப்படுகின்ற இந்த உலக சைவ மாநாடு மலேசியாவின் கோலாம்பூர் நகரில் உள்ள ஏசியன் பசுபிக் மேம்பாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை மற்றம் இலண்டன், இந்தியா, சிங்கப்பூர், கனடா, பிரான்ஸ், மொறிஷியஸ், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து ஆன்மீகவாதிகளும், சைவ சமயத்தில் ஆழ்ந்த அறிவுபெற்ற பேரறிஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டில் இலங்கையில் இருந்து பல அறிஞர் பெருமக்களும் கலந்து கொள்ளவுள்ளதோடு, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் அமைச்சின ஆலோசகர் ஆர். பேரின்பநாயகம் ஆகியோரும கலந்துகொள்ளவுள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று அதிகாலை மலேசியாவிற்கு பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




சாயி அருளமுதம்

**புதுமை**

புதிதாக இருப்பது யாதெனில் மனிதனின் விபரீதமான நடத்தையும் தனது இயல்புக்கு விரோதமாக நடக்கக்கூடிய சாமர்த்தியத்தைத் தவறாக உபயோகித்துத் தனது திறமைகளை வீணாக்கும் மார்க்கங்கள் என்பவையும் மட்டுமே. தனது இயல்பை விருத்தி செய்வதற்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள பாதையை மறந்துவிட்டதனாலேயே துன்பங்களும் ஏற்பட்டிருக்கிறது. அதுவே எனது அவதாரத்தின் காரணமாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை


## மாக்ஸிஸவாதக் கல்வி புகட்டத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் கல்விப் பிரிவு, மாக்ஸிஸவாதக் கல்வி நடவடிக்கைகளைப் பாரிய அளவில் முன்னெடுப்பதெனத் தீர் மானித்துள்ளது.

இந்தக் கல்வி முன்னெடுப்பின் முதற்கட்டம் கொழும்பு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வகையில்,இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு, கோட்டை வீதி,ராஜகிரிய என்ற விலாசத்தில் மாக்ஸிஸவாத கோட்பாட்டுக் கல்வி முகாம் ஒன்றை நடத்தவுள்ளது.

மாக்ஸிஸவாத தத்துவம், சர்வதேச வாதத்தின் சரித்திரம், சோஷலிசக் கட்சியின் சரித்திரம், தேசியப் பிரச்சினை- மாக்ஸிஸவாத வியூகம் ஆகிய தலைப்புகள் இம் முகாமில் எடுத்தாளப்படவுள்ளன.

கட்சியின் அங்கத்தவர்களினதும் பொது மக்களினதும அரசியல் அறிவை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். (உ)

## ஆசிரிய கல்வி நிறுவனங்கள் இரண்டு அமைப்பு

(கொழும்பு)

வவுனியா வடக்கு மற்றும் மடுக்கல்விக் கோட்டங்களில் இரு ஆசிரிய கல்வி நிறுவனங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 25ஆசிரிய கல்வி நிறுவனங்களை அமைக்கத் திட்டமிடப்பட்ட போதிலும், இதுவரை 23 கல்வி நிறுவனங்களே அமைக்கப்பட்டுள்ளன.

இறுதியாக 23வது ஆசிரிய கல்வி நிறுவனம் மட்டக்களப்புப் பட்டிப்பளையில் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி-61)

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தாயகத்திலிருந்து இராணுவம் விலக வேண்டும்

## பொங்குதமிழ் நிகழ்வின் தலைவர் அமிர்தலிங்கம்

(வவுனியா)

இன்றைய பொங்குதமிழ் நிகழ்வானது இரண்டாவது தடவையாக வவுனியா வாழ் தமிழ் பேசும் மக்களினால் ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களினை வெளிப்படுத்துவதற்காக கொண்டாடப்படுகின்றது இவ்வாறு பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பொங்குதமிழ் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில்,

கடந்த வருடம் நிகழ்ந்த பொங்கு தமிழ் நிகழ்வானது தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுய நிர்ணய உரிமை, தனித்தேசிய இனம், மரபு வழித் தாயகம் என்பனவற்றின் அடிபபடையில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியதாக அமைந்தது. அதன் விளைவாகவும் விடுதலைப் புலிகளின் பலத்தினாலும் உருவாக்கப்பட்ட யுத்தமற்ற சமாதான சூழலில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுக்கள் தடைப்பட்டுப் போயுள்ள இன்றைய நிலையில் இப் பொங்கு தமிழ் நிகழ்வானது நடைபெறுகின்றது.

தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படாத காரணத்தினாலும், வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரமுள்ள நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்படாமையினாலுமே சமாதானப் பேச்சுக்கள் தடைபட்டுப் போனது.

தடைப்பட்டுப் போன சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வசதியாக தமிழ் மக்களின் இயல்புவாழ்விற்கு தடைவிதிக்கும் வகையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஆக்கிரமித்திருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாயகப் பிரதேசத்தை விட்டு விலக வேண்டும்.

*தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ வீடுதலைப் புலிகளிடம் அதிகாரமுள்ள இடைக்கால அரசொன்று கையளிக்கப்படவேண்டும்.

*அதனைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

*தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்துள்ள சர்வதேச நாடுகள் அவாகள் மீதான தடையை நீக்கி அவர்களை அங்கீகரிக்க வேண்டும்.

இவ்விடயங்களை பொங்குதமிழ் நிகழ்வினூடாக நாம் இலங்கை அரசுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வெளிப்படுத்த விரும்புகின்ற அதே வேளை இப் பொங்குதமிழ் நிகழ்வானது இராணுவத்தினரை ஆத்திரப்படுத்துவதற்காகவோ அல்லது சிங்கள மக்களுக்கு எதிராகவோ அவர்களது கௌரவத்தை பறிப்பதற்காகவோ மேற்கொள்ளப்படும் ஒரு நிகழ்வு அல்ல. அந்த வகையில் பல்வேறுபட்ட இராணுவ அழுத்தங்களின் மததியில் நடைபெறும் இந் நிகழ்வின் மூலம் எமது நியாயமான உரிமைகளை வென்றெடுக்க முடியும் என நாம் திடமாக நம்புகிறோம் என்று தெரிவித்தார். (இ)

### திலீபனின்...

தொடர்ந்து மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இதேவேளை நல்லூர் ஆலய முன்றலில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 8.30 மணிக்கு திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து நினைவூர்திப் பவனியும், மக்கள் பேரணியும் நல்லூர் ஆலய முன்றலுக்குச் சென்று அங்கு அடையாள உண்ணாவிரத நிகழ்வு இடம் பெறும் என்று யாழ்.நல்லூர்க் கோட்ட, தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் அஞ்சலி நிகழ்வுகளில் அந்தந்தக் கோட்டங்களிலுள்ள பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், அரச திணைக்களங்களின் பணிப்பாளர்கள் அனைவரும் அனைத்துப் பணிகளையும் முற்றாக நிறுத்தி தமது பிரதேசத்தில் நடைபெறும் உண்ணாவிரத நிகழ்விலும் கலை நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளுமாறு அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (இ-5)

### பொங்குதமிழ்....

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. தமிழ் பேசும் மக்களாகிய எங்களது விருப்பமான இந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரித்து ஸ்ரீலங்கா அரசுக்கு அதற்கான அழுத்தத்தைக கொடுக்க வேண்டும். வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய தாயகம். இங்கிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேற வேண்டும்.

மக்கள் செயல் முனைப்புடன் சமாதான நடைமுறையில் பங்கு கொள்ளும் அச்சமற்ற சூழல் அப்போது தான் தோன்ற முடியும். அத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளான, தனித் தேசிய இனம், மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டு, இனப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வு காண்பதன் ஊடாகவே நிரந்தர சமாதானம் சாத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கின்றோம். (இ)

### முஸ்லிம்....

சட்ட நிபுணர்களையும் அரசியல் துறை கலாநிதிப் பட்டம் பெற்ற பல விரிவுரையாளர்களையும் கலந்தாலோசித்து அடிப்படைத் திட்டங்களை வகுத்துள்ளது.

மேலும் இந்திய-பிரித்தானிய அரசாங்கமும் இக்குழுவை தங்களது நாட்டுக்கு விஜயம் செய்து சமஷ்டி முறையான தீர்வுத் திட்டம் பற்றியும் அதன் நடைமுறையைப் பற்றியும் நேரடியாகப் பார்த்து ஆராய்வதற்கு வருகைதருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக இக்குழுவின் அங்கத்தவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமாகிய எம்.நிசாம்காரியப்பர் விளக்கமளிக்கையில் இக்குழு ஒக்டோபர் மாதத்தின் முதல் பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும். அந்த விஜயத்தின் பொழுது இந்தியாவில் உள்ள பாண்டிச்சேரி மற்றும் ஜம்முஹாஷ்மீரில் லடக் உப மாநிலத்திற்கும் விஜயம் செய்யவுள்ளதாகக் கூறினார்.

தங்களுடைய பிரித்தானிய விஜயத்தின் போது ஸ்கொட்லாந்து, வடஅயர்லாந்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் வடஅயர்லந்தில் வெற்றிகரமாக நடைபெற்று வரும் வடக்குத் தெற்கு நடைமுறைகளையும் ஆராயவுள்ளதாகவும் நிசாம் மேலும் கூறினார். (இ)

### வெளிநாட்டு....

இதேவேளை பெல்ஜியம் நாட்டை தலைமை அலுவலகமாக கொண்ட வன்செயலற்ற அமைதிப் படையைச் சேர்ந்த மேற்படி 11 பேரையும்

# தேசிய விளையாட்டு விழாவை யாழில் நடத்துவதென்ற முடிவில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்ற திட்டத்தை விளையாட்டுத் துறை அமைச்சு கைவிட்டுள்ளதாக யாழ் மாவட்ட விளையட்டுத்துறைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கொழும்பு அல்லது பதுளையில் நடத்தத் திட்டம்

எதிர்வரும் 30ம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 29வது தேசிய விளையாட்டு விழா குடாநாட்டின் அரசியல் மற்றும் இராணுவ நெருக்கடிகள் நிலவும் நிலையில் நடத்துவது பொருத்தப்பாடற்றது எனவும், உலகின் கண்களுக்கு இங்கு இயல்பு வாழ்வு தோன்றி விட்டது என்பதை காட்டும் அரசின் ஓர் சூழ்ச்சி இதுவெனவும் கூறிய பொது மக்கள் இதனைஎதிர்த்துக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அமைச்சு தேசிய விளையாட்டு விழாவை யாழில் நடத்துவது என்ற முடிவைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் துரையப்பா விளையாட்டு மைதான புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி விளையாட்டு விழா விரைவில் கொழும்பு அல்லது பதுளையில் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக மேலும் தெரியவருகிறது. (உ-4)

# புலி உறுப்பினர்கள் இருவர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோட்டை முனைப் பாலம் சோதனைச் சாவடியில் வைத்து, இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இவர்களிடம் மோட்டார் சைக்கிளுக்குரிய எந்தவொரு ஆவணமும் இல்லாததையடுத்தே பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இருவரும் மட்டக்களப்பு பொலிஸ நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு 5

### சமாதான....

இச்சந்திப்பில் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் தொடர்பான உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வது குறித்து ஆராயப்பட்டது.

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் மூவர் பலி – 40பேர் படுகாயம்

(பக்தாத்)

இதேவேளை சினிமா அரங்கொன்

# மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோட்டை முனைப் பாலம் சோதனைச் சாவடியில் வைத்து, இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இவர்களிடம் மோட்டார் சைக்கிளுக்குரிய எந்தவொரு ஆவணமும் இல்லாததையடுத்தே பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இருவரும் மட்டக்களப்பு பொலிஸ நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு 5 மணிநேர விசாரணையின் பின்னர் நேற்றிரவு 7.30 மணியள வில் விடுதலை செய்யப்பட்டனர் மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (த)

---

**சமாதான....**

இச்சந்திப்பில் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் தொடர்பான உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வது குறித்து ஆராயப்பட்டது.

இவ்வுடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே இரு செயற்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியப் பிரதமருக்கு விளக்கினார்.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் பேணாட் குணதிலக, இந்திய வெளிவிவகார அமைச்சர், அவ்வமைச்சின் செயலாளர் விஷேட ஆலோசகர் ஆகியோர், கலந்து கொண்டனர்.(தி-60)

## கூட்டணி அலுவலகத்தில் திலீபன் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 16ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு, இன்று காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் விடுதலைக கூட்டணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


## சிரிப்பு அறிவிப்பு

**என்று வரும், என்று வரும் 'சுவைத்திரள்' நகைச்சுவை ஏடு என ஏங்கி நின்ற ரசிகர்களே.....**

மீன் பாடும் தேன் நாட்டில் இருந்து வெளிவரும் நகைச்சுவை ஏடு சுவைத்திரள் இன்று தமிழ் உலகு எங்கும் நொந்து போன உள்ளங்களுக்கு ஔடதமாக விரைந்து கொண்டிருக்கிறது

(எண் திக்கில் எங்குமே சுவைத்திரள்)



எமது கொழும்பு விற்பனையாளர்

வி.ஐ.பி. இன்டர்நாசனல், 250, காலி வீதி, கொழும்பு - 06

| | |
|---|---|
| பருத்தித்துறை<br>உதயன் புத்தகசாலை<br>செல்லாச்சி புத்தகசாலை | எமது யாழ்ப்பாண ஏஜன்ட்<br>வசந்தம் புத்தகசாலை<br>ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| நெல்லியடி<br>லஷ்மி கலைக்களஞ்சியம் | கொடிகாமம்<br>அருள்நாயகி புத்தகசாலை |

கார்ட்டூன்கள், நகைச்சுவைக் கதைகள், நானாவித ஆக்கங்கள் எழுத்தாளரிடம் இருந்து வரவேற்கப்படும்.

தொடர்புகள்
ஆசிரியர்: இலக்கியச்சுடர் திக்கவயல் தர்மு
481,பார் வீதி, மட்டக்களப்பு.

*சன்மானம் ஏராளம்*
*எழுதுங்கள் தாராளம்*


துவது பொருத்தப்பாடற்றது எனவும், உலகின் கண்களுக்கு இங்கு இயல்பு வாழ்வு தோன்றி விட்டது என்பதை காட்டும் அரசின் ஓர் சூழ்ச்சி இதுவெனவும் கூறிய பொது மக்கள் இதனைஎதிர்த்துக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து அமைச்சு

எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி விளையாட்டு விழா விரைவில் கொழும்பு அல்லது பதுளையில் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக மேலும் தெரியவருகிறது. (உ-4)

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் மூவர் பலி - 40பேர் படுகாயம்

(பக்தாத்)

ஈராக்கில் நேற்று இருவேறு இடங்களில் இடம் பெற்ற பாரிய குண்டுத் தாக்குதல்களில் மூவர் பலியாகியுள்ளனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பயணிகள் பஸ் ஒன்றில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 20ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அமெரிக்கப் படையினரை ஏற்றிச சென்ற வாகனமொன்றைக் குறி வைத்தே இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை சினிமா அரங்கொன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப் பொன்றில் இருவர் கொல்லப்பட்டதுடன் 20ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

அந்தச் சினிமாத் திரையரங்கில் நீலப்படம் திரையிடப்பட்டிருந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீலப்படங்கள் திரையிடப்படும் திரையரங்குகளில் அண்மைக்காலமாக தீவிரவாத அமைப்பொன்றினால குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

---

## வவுனியாவில் பொங்கு தமிழ்....

பாதுகாப்புக் கெடுபிடிகள் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பேரெழுச்சியுடன் வவுனியாவில் சங்கமித்த தமிழ் மக்கள், தமது உணர்வெழுச்சியை சர்வதேசத்தின் காதுகளுக்கு பொங்கு தமிழ் பிரகடனமாக வெளிப்படுத்தினர்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் திரண்ட பொது மக்கள் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்தனர்.

பிரமாண்டமான பொங்கு தமிழ்ப் பானையைத் தாங்கிய ஊர்தி பேரணிக்கு முன்னே நகர அதனைத் தொடர்ந்து நகர்ந்த மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வர்ணப்படங்களை கைகளில் தாங்கிக் கொண்டு கோசங்களை எழுப்பியவாறு நகர்ந்து சென்றனர்.

இப் பேரணியுடன் குருமன்காடு பூந்தோட்டம், ஹொறவப்பொத்தானை வீதிவழியாக நகர்ந்து வந்த பேரணிகளும் இணைந்து பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு மைதானமான வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்தது.

பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் க.அமிர்தலிங்கம் தலைமையில் எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்" 'நாம் எமது வீடுகளுக்குச் செல்ல இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்', 'தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்' போன்ற பல கோட்பாடுகளை முன்வைத்து இடம் பெற்ற இந் நிகழ்வில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பொங்கு தமிழ்ப்பிரகடனம் வெளியிடப்பட்டதை அடுத்து சிறப்புரைகள் இடம் பெற்றன.தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, மாவை. சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.குலதவராசா, விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

இதேவேளை நிகழ்வின் பாதுகாப்புக் கடமைகளில் 600க்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். (இ-13)

தங்களுடைய பிரித்தானிய விஜயத்தின் போது ஸ்கொட்லாந்து, வடஅயர்லாந்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் வடஅயர்லந்தில் வெற்றிகரமாக நடைபெற்று வரும் வடக்குத் தெற்கு நடைமுறைகளையும் ஆராயவுள்ளதாகவும் நிசாம் மேலும் கூறினார். (இ)

---

**வெளிநாட்டு....**

இதேவேளை பெல்ஜியம் நாட்டை தலைமை அலுவலகமாக கொண்ட வன்செயலற்ற அமைதிப் படையைச் சேர்ந்த மேற்படி 11 பேரையும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் தலா மூன்று, மூன்று பேராக அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் வன்செயலற்ற அமைதிப்படையின் இலங்கைக்கான பிரதிநிதி நொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இவர் அமைதிப் படையினருக்கு ஏற்கனவே பாங்கொங் நகரில் ஒரு மாதப் பயிற்சி வழங்கப்பட்ட போதும் இலங்கையிலும் 6 வார கால உள்ளூர்ப் பயிற்சி வழங்கப்படும் என்றும், இப்பயிற்சி எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொடர்ந்து 6 வாரங்களுக்கு இடம் பெறுமெனவும் இப் பயிற்சிக் காலத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பயிற்சியும் வழங்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இவ் அமைதிப்படையினர் தமது நாடுகளில் நடைபெற்ற சமாதான நடவடிக்கைகளில் பங்கு பற்றியிருப்பதுடன் சர்வதேச சமாதானப் படைகளில் சேவையாற்றிய அனுபவமும் கொண்டவர்கள்.

எனவே இவர்கள் அரசிற்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும், சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் உள்ளூர் தொண்டர் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவார்கள்.

தேவை ஏற்படும் பட்சத்தில் உளளூர் தொண்டர் ஸ்தாபன பிரதிநிதிகளுக்கு சமாதானத் துறையில் பயிற்சிகளையும் வழங்குவார்கள்.

இவர்களின் எண்ணிக்கை தற்போது 11ஆக இருந்தாலும் படிப்படியாக அதிகரிக்கப்படும்.

மனித உரிமை மீறல்கள், அரசியல் நோக்கம் கொண்ட வன்செயல்கள் குறித்தும் இந்த அமைதிப்படை கண்காணிக்கும் என நொக்ஸ் தெரிவித்துள்ளார்.(உ-10)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.